# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 09 சுபகிருது வருடம், ஆனி மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை
(04.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 04, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## சர்வகட்சி அரசே இப்போதைய தேவை



மைத்ரி கருத்து

02 பக்கம்

## எரிபொருள் கப்பல் 8-9 திகதிகளில் வரும்



அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு; டோக்கன் முறையும் இல்லையாம்

02 பக்கம்

## முழு நாடும் இவ்வாரம் முடங்கும் அபாயம்

அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கப்படாத போதிலும், எரிபொருள் நெருக்கடி காரணமாக அடுத்த வாரம் நாடு பூட்டப்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகளைக் கூட பேண முடியாத அளவிற்கு எரிபொருள் நெருக்கடி நாட்டை பாதித்துள்ள நிலையில்,

02 பக்கம்

## ஆட்சி நீடிக்காதென அன்றே கூறினோம்

சொல்கிறார் நீதியமைச்சர்

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டால், அரசாங்கம் நீண்ட காலம் நீடிக்காதென ஆரம்பத்திலேயே கூறியதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## எரிபொருள் நெருக்கடி: வெளிநாட்டுத் தூதரகங்கள் மூடப்படும் நிலையில்!

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான எரிபொருள் தட்டுப்பாட்டினால், கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகமொன்று கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததாக தெரியவருகிறது. அதேபோல் பல தூதரகங்கள் சேவைகளை குறைத்து வருவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

02 பக்கம்



எரிபொருள் நெருக்கடி காரணமாக நேற்றைய தினம் சுமார் 1000 பஸ்களே நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று கொழும்பில் பயணிகளால் நிரம்பி வழிந்த பஸ் இது...

படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன

# தற்காலிக முடக்கம்!

### நாட்டின் நிலைமையினால் அவசரமாக ஆராய்கிறது அரசு

**நமது நிருபர்**

எரிபொருள் நெருக்கடியினால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாத வகையில், தற்காலிக முடக்கமொன்றை நாட்டில் அமுல்படுத்த அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

எரிபொருள் நாட்டுக்கு வரும்வரை, தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருளை அத்தியாவசிய...

02 பக்கம்

## எரிவாயு வழங்க புதுத் திட்டம்

மின்பட்டியல் இருந்தாலே கேஸ் வழங்கப்படும்
மோசடிகளை தடுக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானம்

02 பக்கம்

## ஐ.எம்.எவ். கடனுதவி பெற இலங்கைக்கு நிபந்தனை

அமெரிக்கா செனட் குழு வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைக்கப்பெற வேண்டுமாயின் இலங்கை அரசாங்கம் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டுமென அமெரிக்க செனட்டின் வெளிநாட்டு உறவுகள் குழு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## எரிபொருள் அட்டையின்படி பெற்றோல் விநியோகம்

மன்னார் அரச அதிபர் விசேட அறிவிப்பு

02 பக்கம்

## யாழ். எம்.பியொருவர் கொழும்பு வர எரிபொருளுக்கு 92ஆயிரம் ரூபா செலவு

சபாநாயகரிடம் சுட்டிக்காட்டப்பட்டது

02 பக்கம்

## பாடசாலைகளுக்கு ஒருவார விடுமுறை

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக இவ்வாரம் பாடசாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்றுமுதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## உஷ்



தற்போதைய அரசாங்கத்தை கவிழ்த்து, பொதுஜன பெரமுனவின் புதிய அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனையை கூட்டுக் கட்சிகள் நிராகரித்துள்ளனவாம்.

இதைத் தொடர்ந்து, கடந்த வாரம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஒன்பது கூட்டுக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தின்போது, நாமல் தெரிவித்த யோசனையை வாசுதேவ நாணயக்கார கட்சித் தலைவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

### யாழ்ப்பாணத்தில் சைக்கிள்களுக்குத் தட்டுப்பாடு




### கொழும்பில் சைக்கிள்களை வாங்க மக்கள் வரிசை



எரிபொருள் நெருக்கடியின் காரணமாக மக்கள் சைக்கிள்களை பாவிக்கத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் கடையொன்றில் உள்ள விளம்பரப்பலகையை முதலாவது படத்திலும், கொழும்பில் சைக்கிள் கடையொன்றுக்கு முன்னால் சைக்கிள்களை கொள்வனவு செய்ய வரிசையில் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### கமெண்ட் கந்தர்..

ஸ்கூல்கள மூடிப்போட்டு பார்லிமெண்ட்டை கூட்டுறாங்கள்... பார்லிமெண்ட் கூடுற செலவுக்கு ஒரு மாதகாலம் ஸ்கூலை இலவசமா நடத்தலாம் பாருங்கோ..





மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு
ரூ.10,000,000/-
மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்
ரூ.11,000,000/-
வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்
நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-
மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்
செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.
+9477 157 6356
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation
AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.




*மாதாந்த சீசன் ரிக்கெட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் மொனராகலை காரியாலயத்தில் பெருந்திரளானோர் நேற்று (03) காத்திருந்தனர். (படப்பிடிப்பு: கெலும் குணதிலக்க)*

# அலையில் சிக்கி யுவதி உயிரிழப்பு

**பமுனுகம, உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் கடற்கரையில் நடந்து சென்ற யுவதி ஒருவர் அலையில் சிக்கி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.**

**உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிற்காக ஏனைய நபர்களுடன் வந்த அவர், ஹோட்டலுக்குப் பின்புறமாக உள்ள கடற்கரையில் உலாவச் சென்று கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**உயிரிழந்தவர் கடவத்த, பியன்வில பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

**இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.**

## தற்காலிக...

தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்த உத்தேசிக்கும் அரசாங்கம் அதற்காக தற்காலிக பொதுமுடக்கமொன்றை அமுல்படுத்துவதற்கு ஆராய்கிறது.

எரிபொருள் வரிசைகளில் அத்தியாவசியமான தேவைகள் கொண்டோர் தவிர்ந்த இதர பல தரப்பினரும் காத்துநின்று எரிபொருளை பெறுவதால், அரசாங்கத்தின் கையிருப்பில் உள்ள எரிபொருள் தீர்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே எரிபொருள் இன்றி மருத்துவ சேவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதால், உடனடியான பொதுமுடக்கமொன்றை தற்காலிகமாக அமுல்படுத்தி, எரிபொருள் வந்த பின்னர் நாட்டை திறப்பதற்கு ஆலோசிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் இன்று தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இதற்கிடையில், பொருளாதார நிலையங்கள் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பு தரப்பினரின் உதவியை நாடி, படைமுகாம்களில் இருந்து எரிபொருளை பெறமுடியுமென வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## எரிவாயு வழங்க...

சமையல் எரிவாயு சிலிண்டர்களை இனி விநியோகிக்கும்போது புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்த லிட்ரோ எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி சமையல் எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்வோர், வீட்டு மின் பட்டியலை சமர்ப்பித்தால் மாத்திரமே அவர்களுக்கு எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும். அந்த மின்பட்டியலில் விசேட முத்திரை பதியப்படும் என்பதால் இதனூடாக மோசடிகளை தவிர்க்கலாமென லிட்ரோ நிறுவனம் கருதுவதாக தெரிகிறது.

வாடகை வீடுகளில் இருப்பவர்களுக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் இந்த திட்டம் வகுக்கப்படவுள்ளதாக அறியமுடிந்தது.

## உஷ்

***இந்த நெருக்கடிக்கு ராஜபக்ஷக்களே காரணம் என்பதால் அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியாது. எனவே, நாமல் ராஜபக்ஷ எம்.பியுடன் எவ்வித கலந்துரையாடலும் நடத்துவதில்லை என கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.***

## ஐ.எம்.எவ் கடனுதவி...

அதற்கமைய, மத்திய வங்கியின் சுதந்திரம், ஊழலை ஒழிப்பதற்கு வலுவான நடவடிக்கைகள் எடுத்தல், சட்டத்தின் ஆட்சியை பாதுகாத்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமே இலங்கையுடன் உடன்படிக்கைக்கு வர வேண்டும் என குறித்த குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த குழுவின் அதிகாரி ஒருவரினால் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், கட்டுப்பாடற்ற கடன்சுமை மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் இலங்கை தொடர்ந்து பாதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதுடன், ஊழல் அபாயத்தை எதிர்ப்பதற்கு புதிய சீர்திருத்தங்களைச் சேர்ப்பதே சர்வதேச நாணய நிதியத்தின் புதிய வேலைத்திட்டத்தின் நோக்கம்" என சர்வதேச நாணய நிதியம் தனது ட்விட்டர் பதிவில் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இந்த பதிவிற்கு பதிலளித்த அமெரிக்க செனட்டின் வெளிநாட்டு உறவுகள் குழு, அந்த முக்கிய நடவடிக்கையை எடுக்காமல், கட்டுப்பாடற்ற கடன் மற்றும் மோசமான பொருளாதார நிர்வாகத்தால் இலங்கை தொடர்ந்து பாதிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

## சர்வகட்சி அரசே...

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என மகாசங்கத்தினர் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ள நிலையில், அவ்வாறு சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் இலங்கை கலவரங்கள் மற்றும் போராட்டங்களின் கேந்திரமாக இருக்கும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் பிரதமர் பதவியை ஏற்கமாட்டேன், பொருளாதார மந்தநிலையில் இருந்து இலங்கையை மீட்பதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு திறமையும் அறிவும் இல்லை. ஆளுங்கட்சியை சேர்ந்த அனைத்து அமைச்சர்களும் பதவிவிலகி அரசாங்கம் உடனடியாக இராஜினாமா செய்து சர்வகட்சி ஆட்சி அமைக்க, வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## எரிபொருள் அட்டையின்படி...

மன்னார் மாவட்டத்தில் பெற்றோல் விநியோகம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) மாலை விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அதற்கமைவாக, நாளை 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் மன்னார் மாவட்டம் முழுவதும் பிரதேச செயலகங்கள் ஊடாக வாகனங்களுக்கு என வழங்கப்படும் எரிபொருள் அட்டையின் அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் உள்ள கிராம அலுவலர்கள் பிரிவுகளை இணைத்து வாகனங்களுக்கு ஒரு நாள் என வழங்கப்படும். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கான நேரமும் முதல் நாள் அறிவிக்கப்படும்.

அத்துடன், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக வழங்கப்படும் எரிபொருள் விநியோகத்தின் போது சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்படும் அட்டையுடன் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டையையும் கொண்டு வருதல் அவசியம். இது மன்னார் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

தற்போது மாவட்டத்தில் இரண்டு ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தினால் வழங்கப்பட்டாலும் எதிர்வரும் 15ஆம் திகதியின் பின்னர் ஏனைய எரிபொருள் நிலையங்களுக்கும் கிடைக்கப் பெற்றால் கிராமங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களில் வழங்கக் கூடியதாக இருக்கும்.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் எரிபொருள் நிலையம் இல்லாமையால் அருகிலுள்ள நிலையத்தினூடாக வழங்கப்படும்.

இதேபோன்று முசலி மற்றும் மடு பிரதேச வாகனங்களுக்கும் அண்மைய நிலையங்களில் வழங்கப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் மேலும் தெரிவித்தார்.

## முழு நாடும் இவ்வாரம்...

எரிபொருளை இறக்குமதி செய்யும் வரை இந்த அபாய நிலை தொடரும் எனவும் அறியமுடிகின்றது.

பொதுப் போக்குவரத்து சேவை பஸ்கள் மட்டுமன்றி, சுகாதார சேவைகள், கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளையும் பராமரிக்க முடியாத அளவுக்கு எரிபொருள் நெருக்கடி மோசமடைந்துள்ளது.

மேலும், மருத்துவமனைகளில் அம்பியூலன்ஸ் சேவை மற்றும் மருத்துவ விநியோக சேவைகளுக்கு போதிய எரிபொருளை வழங்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் கடந்த வாரம் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருளை வழங்கியபோதிலும், கடந்த வாரமும் பல அத்தியாவசிய சேவைகள் தடைப்பட்டன.

இந்நிலையில், அடுத்த வாரத்திற்கு நாட்டின் செயற்பாடுகளை வழமையாகப் பேணுவதில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## ஆட்சி நீடிக்காதென...

அரசாங்கம் பதவிக்கு வந்த உடன், அஜித் நிவாட் கப்ரால் மற்றும் பீ.பி.ஜயசுந்தர ஆகியோரை நியமித்ததும் அரசாங்கத்தின் இருப்புக்கு தடையாக இருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

22ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பாக விளக்குவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

கம்மன்பில உட்பட 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அன்று மேற்கொண்ட போராட்டத்தின் பிரதிபலனாக அன்று எதிர்க்கட்சிக்கு செய்ய முடியாததை செய்ய முடிந்தது.

அத்துடன், 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டால், அரசாங்கம் இரண்டு ஆண்டுக்கு மேல் நீடிக்காது என்று நாங்கள் எதிர்வுகூறியிருந்தோம்.

மிகப் பெரிய யுத்தத்தில் வென்றதன் காரணமாகவே மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆறு ஆண்டுகளுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது. 18ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை கொண்டு வந்ததன் காரணமாக அவரது பதவிக்காலம் நான்கு ஆண்டுகளில் முடிந்தது. இந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டால், அரசாங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்காது என்று நாங்கள் கூறினோம்.

நாங்கள் கூறியதுபோலவே நடந்தது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு மேல் அரசாங்கம் பதவியில் இருக்காது என்று 2021ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி நேரடி ஊடக சந்திப்பொன்றில் கூறினேன்.

2022ஆம் ஆண்டு ஏப்ரலில் அரசாங்கத்தால் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனது. மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமல் போகும். மக்கள் வீதியில் இறங்குவார்கள். பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் மக்களை கட்டுப்படுத்த முடியாமல் போகும். மக்கள் மிகவும் ஆத்திரமடைவார்கள், ஆட்சி மாற்றம் ஏற்படும். நாடாளுமன்றத்தை கொண்டு நடத்த முடியாமல்போகும் என்று அப்போதே கூறினேன். ஏழு மாதங்களுக்கு முன்னர் இதனை கூறினேன்.

மக்கள் வீதியில் இறங்குவார்கள் என்று அறிந்தே நான் இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் யோசனை முன்வைத்தேன். அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது. எனினும் அந்த யோசனையை ஆளுங்கட்சியை போல், எதிர்க்கட்சியும் நிராகரித்தது. இதற்கிடையில் மக்கள் வீதியில் இறங்கியதால், பிரச்சினையின் பாரதூரமான தன்மையை அனைவரும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

இது சம்பந்தமாக மூன்று வாரங்கள், அனைத்து கட்சிகளுடனும் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடினோம். பிரதான எதிர்க்கட்சி அரசாங்கத்தை பொறுப்பேற்க முன்வந்தால், ஒப்படைப்பீர்களா என்று நாங்கள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

ஜனாதிபதி அதற்கு இணங்கினார். ராஜபக்ஷ குடும்பத்தினரை அமைச்சரவையில் இருந்து நீக்குவது தொடர்பில் பேச்சு நடத்தினோம், ஜனாதிபதி அதற்கும் இணங்கினார்.

பிரதமரை நீக்கவும் ஜனாதிபதி இணங்கினார். நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேலைத்திட்டம் இருந்தால், நான் பிரதமரை நீக்க தயாராக இருக்கின்றேன் என ஜனாதிபதி கூறினார். பிரதான எதிர்க்கட்சி உட்பட எதிர்க்கட்சிகளுக்கு நாங்கள் அழைப்பு விடுத்தோம்.

மூன்று வாரங்கள் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைக்கு எந்த பிரதிபலனும் கிடைக்கவில்லை. சகல கோரிக்கைகளையும் எதிர்க்கட்சி நிராகரித்ததால், பிரதமர் பதவியை ஒருவருக்கு கொடுத்து அரசாங்கத்தை அமையுங்கள் என்று எமக்கு ஜனாதிபதியிடம் கூற நேரிட்டது.

இதனடிப்படையில் ஜனாதிபதி, ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்தபோது, நாங்கள் ஒத்துழைப்பு வழங்கினால், பிரதமர் பதவியை ஏற்று பிரச்சினைக்கு தீர்வுகாண தயார் என ரணில் விக்ரமசிங்க கூறினார் எனவும் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## யாழ். எம்.பியொருவர் கொழும்பு...

நாடாளுமன்றக் கூட்டங்களுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து, பணிகள் முடிந்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிச் செல்ல எரிபொருளுக்கு மாத்திரம் 92ஆயிரம் ரூபா செலவாவதாக அந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அம்பாறையில் இருந்து நாடாளுமன்றத்திற்கு வரும் ஒரு பயணத்திற்காக மாத்திரம் எரிபொருளுக்கு 66ஆயிரம் ரூபா செலவிடப்படுவதாகவும் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு 75ஆயிரம் ரூபா செலவாவதாகவும் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 54ஆயிரம் ரூபா செலவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகரித்துள்ள எரிபொருள் செலவை நாடாளுமன்றத்தில் வழங்கும் எரிபொருள் கொடுப்பனவால் ஈடுசெய்ய முடியவில்லை எனவும் இதனால், இந்த பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## எரிபொருள் கப்பல்...

ஜூலை 22 அல்லது 23ஆம் திகதியளவில் இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் பெற்றோல் கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இத்தகவலை அமைச்சர் வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

மேலும், கொரல் நிறுவனத்திடமிருந்து டீசல் கப்பலொன்று ஜூலை 5ஆம் திகதி இந்தியாவிலிருந்து புறப்படும். அது ஜூலை 8ஆம் திகதி அல்லது 9ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையும். இந்த கப்பல் 40,000 மெட்ரிக் தொன் டீசலுடன் நாட்டை வந்தடையவுள்ளது.

இதற்கு மேலதிகமாக டீசல் கப்பல் ஜூலை 11முதல் 14ஆம் திகதிகளுக்கு இடையில் நாட்டை வந்தடையவுள்ளது. இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் ஊடாகடீசல் கப்பலொன்று 15 மற்றும் 17ஆம் திகதியளவில் நாட்டை வந்தடையும்.

நாடு முழுவதும் தற்போது பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், ஜூலை 10ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றோல் கப்பலொன்றை பெற்றுக்கொள்வதற்காக 03 புதிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகிறது. மலேசிய அரசாங்கத்துடனும் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வது குறித்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

எரிபொருள் வழங்குவதில் அறிமுகப்படுத்தப்பட்ட டோக்கன் முறையானது ஜூன் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டது. இனி இந்த டோக்கன் முறை நடைமுறையில் இல்லை. இலங்கை கடனை திரும்பச் செலுத்தாத நாடு என அறிவிக்கப்பட்டுள்ளதால், எரிபொருளை பெற்றுக்கொள்வதில் மிகவும் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்யும் போது, வெளிநாட்டு வங்கி ஒன்றின் உறுதிப்பத்திரத்தை பல விநியோகஸ்தர்கள் கோருகின்றனர். அத்துடன் இலங்கை எரிபொருளை பெற்றுக்கொள்ள முன்வைக்கும் விலைமனுக்களை பெற எந்த விநியோகஸ்தரும் முன்வராத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை எரிபொருள் தேவைப்படும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் எரிபொருளுக்கான கட்டணங்களை டொலர்களில் செலுத்தினால், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை வழங்கத் தயாராக இருக்கின்றது.

மாதந்தோறும் அவ்வாறு எரிபொருளை வழங்குவது சிரமம் என்றாலும் வாரந்தோறும் வழங்க முடியும். நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலைக்கு தேவையான எரிபொருளுக்காக டொலர்களில் பணத்தை செலுத்த முடியும் விதத்தில் முறை உருவாக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புக்கொண்டு அந்த வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும். எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டை போக்க எதிர்பார்த்துள்ளோம்.

அதன் பின்னர் தொடர்ந்தும் எரிபொருள் விநியோகிக்கப்படும். எரிபொருளை கூடியளவில் முகாமைத்துவம் செய்து விநியோகிக்க எண்ணியுள்ளோம்.

தற்போது ஏற்பட்டுள்ள சிரமங்கள் சம்பந்தமாக வருத்தத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் மக்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளுக்கு...

தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைக்கு மத்தியில் பாடசாலை நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கல்வி அதிகாரிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எரிபொருள் நெருக்கடி...

மேற்கத்தேய தூதரகமொன்றின் உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர், வெளிநாட்டு இராஜதந்திரப் பணிகள் சரியாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கான சர்வதேச சட்டக் கடமைகளில் இலங்கை வெளியுறவு அமைச்சு தவறிவிட்டது என்பதை ஊடகமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எங்களிடம் (தூதரகம்) எரிபொருள் தீர்ந்து போகிறது. இன்னும் ஒரு வாரத்துக்குத்தான் டீசல் இருக்கிறது. அதன் பிறகு நாம் மூட வேண்டும். வியன்னா உடன்படிக்கையின் அடிப்படையில், வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள் சரியாகச் செயல்படுவதை தூதரகங்கள் உள்ள நாடுகள் உறுதிசெய்ய வேண்டும். தூதரகங்கள் சரியான சேவைகளை வழங்க முடியாவிட்டால் அல்லது மூடப்பட வேண்டியிருந்தால், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பிரஜைகளுக்கு இனி எங்களால் சேவை செய்ய முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் அவர்.

இலங்கையில் உள்ள உயர்மட்ட பிரதிநிதிகளை தூதரக வளாகத்தில் சந்திப்பதற்கு மாத்திரமே தனது உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதாக தெரிவித்த அந்த இராஜதந்திரி ,"நான் இப்போது உத்தியோகபூர்வ பணிகளுக்கு செல்லவில்லை," என்று அவர் கூறினார்.

இந்த நாட்களில் பெரும்பாலான மக்கள் செய்வது போலவே, தூதரக ஊழியர்கள் போக்குவரத்தில் பெரும் சிக்கல்களை அனுபவிக்கின்றனர். அத்தியாவசிய பணியாளர்கள் மட்டுமே பணிக்கு வருகின்றனர். மற்றவர்கள் முடிந்தவரை வீட்டிலிருந்து வேலை செய்கிறார்கள். "எவ்வாறாயினும், எங்கள் விசா பிரிவு ஊழியர்கள் கடமைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், இது பணியாளர்கள் சமமற்ற மற்றும் நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதைக் காட்டுகிறது. வேறு வழியுமில்லை " என்று அவர் மேலும் கூறினார்.

இலங்கை மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதால் சர்வதேச சமூகத்தின் உதவிகளை கோரியுள்ளது.

"தற்போது மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு நாடுகளை நம்ப வைக்க முயற்சிக்கிறது. இலங்கைக்கான மனிதாபிமான உதவிகளை நாம் பரிசீலிக்க வேண்டிய நாள் வரும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. கடந்த வாரம் அந்த நேரம் வந்தது,

மருந்துகள் மற்றும் உணவு போன்ற மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு எனது அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டேன்," என்று அவர் மேலும் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை, இந்திய உயர் ஸ்தானிகராலயம் தனது தூதரக சேவைகளை வாரத்தின் மூன்று நாட்களுக்கு – புதன், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய மூன்று நாட்களுக்கு குறைப்பதாக அறிவித்தது. இது இந்தியாவிற்கு பயணிப்பவர்களுக்கு விசா பெறும் செயற்பாடுகளை பாதிக்கிறது.

எவ்வாறாயினும், நாட்டை விட்டு வெளியேற விரும்பும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக வாரத்தின் வேலை நாட்கள் முழுவதும் தனது தூதரக சேவைகளை மீண்டும் தொடங்குவதாகவும், யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய பிராந்திய தூதரக அலுவலகங்களும் செயல்படும் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# 21ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மேலும் வலுப்படுத்த முயற்சி

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்பு



21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு நாங்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிடுகிறோம் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நிலைமை குறித்து நிபுணர்களுடன் இணைந்து புதிய வேலைத்திட்டத்தை வகுத்து வருகிறோம். தற்போது பேசப்பட்டுவரும் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கான யோசனையை நானே சில மாதங்களுக்கு முன்னர் முன்வைத்திருந்தேன். சர்வகட்சி அரசாங்கம் என்பது இன்று நாட்டின் பொது நிலைப்பாடாக மாறியுள்ளது. எனவே இதற்காக அனைவரும் ஒத்துழைக்க வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறோம்.

எரிபொருள் வரிசை, மருந்து தட்டுப்பாடு, உர தட்டுப்பாடு உள்ளிட்ட நாட்டில் தற்போதுள்ள எந்த பிரச்சினைக்கும் இந்த அரசாங்கத்தால் தீர்வு வழங்க முடியாது. எனவே அரசாங்கம் மாற வேண்டும். இந்த அரசாங்கத்திலுள்ள சகல பிரதிநிதிகளும் பதவி விலக வேண்டும். பதவி விலகி, எங்களின் யோசனைக்கமைய நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளினதும் பங்குபற்றலுடன் சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி பதவியிலிருக்கும் வரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மேலும் அதிகரித்து, அவரின் அதிகாரங்களை வலுப்படுத்தும் வகையில் 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் வகுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழு எதிர்ப்பையும் வெளியிடுகிறது.

இது ஜனாதிபதிக்குரிய தனிப்பட்ட விடயமல்ல. எமது அரசியல் கொள்கையுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எனக்குரிய அதிகாரங்களை நீக்கிக்கொண்டேன். ஜனாதிபதி பதவி காலத்தை ஆறு வருடத்திலிருந்து ஐந்து வருடமாக குறைத்து கொண்டேன். 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு இயைவான வகையில் 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவரவும், தற்போதைய ஜனாதிபதி பதவியிலிருக்கும் வரை அவருக்குரிய அதிகாரங்களை வலுப்படுத்திக் கொள்வதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து போராடி வருகிறோம். இது தொடர்பில் நாடு தழுவிய ரீதியில் விசேட கலந்துரையாடல்களையும் முன்னெடுத்து வருகிறோம் என்றார்.

# சிறுத்தைப்புலிகளை பாதுகாக்க விசேட செயற்திட்டங்கள்

(தலவாக்கலை செய்தியாளர்)

மத்திய மலைநாட்டில் வாழும் சிறுத்தைப் புலிகளை பாதுகாக்கும் வகையில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக பல விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் மத்திய மலைநாட்டில் மலைகளில் மற்றும் வனப் பகுதிகளில் வாழ்ந்து வரும் சிறுத்தைப்புலிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுத்தைப்புலிகளை பாதுகாப்பது மற்றும் ஏனைய வன விலங்குகளை பாதுகாப்பது தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், 1000 முச்சக்கர வண்டிகள் மற்றும் 1000 கிராம சேவகர் காரியாலயங்கள், தோட்ட அலுவலகங்கள் மற்றும் ஏனைய அரச அலுவலகங்களில் சிறுத்தைப்புலிகள் மற்றும் ஏனைய வனவிலங்குகளை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகளை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த சிறுத்தைப்புலிகள் மற்றும் பிற வன விலங்குகள் பற்றிய தகவல்களை விரைவாகப் பெறுவதே இந்த திட்டத்தின் முதன்மையான நோக்கம் என்று வனவிலங்கு அதிகாரிகள் கூறுகின்றனர். சிறுத்தைப்புலிகள் மற்றும் பிற வன விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளான போதைப்பொருள், பொறி வைத்தல், துப்பாக்கிச் சூடு அல்லது வேறு குற்றச் செயல்கள் ஏதேனும் அறிந்தால் உடனடியாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1992 இற்கு அழைப்பை எடுத்து தெரிவிக்குமாறு வனவிலங்கு திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# பல்கலைக்கழக மாணவனுக்கு ரோட்டறிக் கழகம் நிதியுதவி



(நுவரெலியா நிருபர்)

டிக்கோயா ரோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் ஹட்டனில் வசிக்கின்ற கிருஸ்ணசாமி சர்தாசன் என்ற மாணவனுக்கு அவருடைய பல்கலைக்கழக கல்வியை தொடர்வதற்காக 60ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த தொகையானது மாதாந்தம் 05ஆயிரம் ரூபா வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை லண்டனில் வசிக்கின்ற யோகேஸ்வரன் என்பவரும் டிக்கோயா ரோட்டறிக் கழகத்தின் உறுப்பினர் சிதம்பரம்பிள்ளை சப்பானி ஆகிய இருவரும் இணைந்து டிக்கோயா ரோட்டறிக் கழகத்திற்கு வழங்குகின்றனர். டிக்கோயா ரோட்டறி ஊடாக மாதாந்தம் குறித்த மாணவனுக்கு உதவி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் இரண்டு மாதங்களுக்கான தொகையான 10ஆயிரம் ரூபாவை டிக்கோயா ரோட்டறிக் கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு, உறுப்பினர்களான டாக்டர் சந்திரராஜன் சோமசுந்தரம், ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் சத்தியமூர்த்தி ஆகியோர் இணைந்து குறித்த மாணவனின் தாயாரிடம் அண்மையில் கையளித்தனர்.

# மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் ஐந்து மாதங்களில் 10,432 பேர் கைது

## 12,313 சுற்றிவளைப்பில் 1,881 பெண்களும் சிக்கினர்

(ஜூட் சமந்த)

2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 30ஆம் திகதி வரையிலான ஐந்து மாத காலப்பகுதியில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 10ஆயிரத்து 432 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 881 பேர் பெண்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட 12ஆயிரத்து 313 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 132 சட்டவிரோத மதுபான உற்பத்தி இடங்கள், 127 சட்டவிரோத மதுபான விநியோக இடங்கள், 06ஆயிரத்து87 பதுக்கல்கள், ஆயிரத்து 626 மதுபான போக்குவரத்து, ஆயிரத்து 689 சட்டவிரோத மதுபான விற்பனை ஆகியன முற்றுகையிடப்பட்டுள்ளன.

மேலும், சட்டவிரோதமாக போதைப்பொருள் வைத்திருந்தமை, விநியோகித்தமை தொடர்பில் 03ஆயிரத்து 987 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு முற்பட்ட 24 பேர் கைது

## மாரவிலவில் தங்கியிருந்தபோது பொலிஸாரால் சுற்றிவளைப்பு



சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு முயற்சித்த 24 பேர் மாரவில பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (02) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாரவில, தல்வில பகுதியில் இவர்கள் தங்கியிருந்தபோது கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டோரில் 22 நாள் குழந்தையொன்றும் 02 மாத குழந்தையொன்றும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவர்களில் 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் ஐந்து நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து வந்ததாகவும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு நீண்டநாள் படகு வரும் வரை காத்திருந்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத பயணத்துக்கு முதல்கட்டமாக 02இலட்சம் ரூபா பணம் தரகர்களுக்கு கொடுத்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சிலாபம், மாதம்பை பகுதியைச் சேர்ந்த தரகர் ஒருவருக்கே அவர்கள் பணம் கொடுத்துள்ளனர்.

இதேவேளை, சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு தயாராக இருந்த 15 பேர் கடந்த மாதம் 07ஆம் திகதி மாரவில பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# புதையல் தோண்டிய பதினொரு பேர் கைது

உஹன, உதயகிரிய பிரதேசத்தில் புதையல் தோண்டிய 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உஹன பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் காணப்பட்ட புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பல கருவிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் உஹன, இரத்தினபுரி, தலவாக்கலை மற்றும் தெஹியத்தகண்டி ஆகிய பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்ட 25 முதல் 67 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் அம்பாறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் உஹன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளத்தில் மின்சாரத்தில் இயங்கும் சைக்கிள் கண்டுபிடிப்பு





(ரஸீன் ரஸ்மின்)

பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் அதிகரித்து வருவதால் பலரும் மின்சார வாகனங்கள் பக்கம் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிலும், மின்சாரத்தில் இயங்கும் துவிச்சக்கர வண்டிகள் மீது மக்கள் தமது கவனத்தை செலுத்தியுள்ளனர்.

இது பொருளாதார ரீதியாக அனைவருக்கும் ஏற்றதாக அமைவதோடு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் பெறுகிறது.

அந்த வகையில், புத்தளம் நகரைச் சேர்ந்த அப்துல் லதீப் முஹம்மது ரியாஸ் மின்சாரத்தில் ஓடக்கூடிய துவிச்சக்கர வண்டி ஒன்றை தானாகவே தயாரித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக தான் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகவும், இதனையடுத்து, மேற்படி மின்சாரத்தில் இயங்கக்கூடிய வகையில் துவிச்சக்கர வண்டி ஒன்றை ஒருசில நாட்களில் தயாரித்து அதில் வெற்றியும் கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

தனது சொந்த தேவைகளுக்காக மட்டும் இப்போது மேற்படி மின்சார சைக்கிளை தயாரித்துள்ளதுடன், இதுபோல ஏனையவர்களும் பயன்பெற வேண்டும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

இந்த சைக்கிளை ஒருமுறை சார்ஜ் செய்தால் சுமார் 20முதல் 25கிலோ மீற்றர் தூரம் வரை பயணம் செய்யலாம். இதில் ஜீ.பி.எஸ் வசதியும் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலமே இந்த சைக்கிள் எத்தனை கிலோ மீற்றர் தூரம் ஓடும் என்பதை சரியாக கணிக்கலாம். 12 வோல்ட் பெட்டரியை பயன்படுத்தி அதிலிருந்து ஏ.சி கரன்ட்டாக மாற்றி மோட்டார் ஒன்றின் உதவியுடன் இந்த சைக்கிள் இயங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்பொழுது பொருத்தப்பட்டுள்ள பற்றரிக்கு மேலதிகமாக இன்னொரு பற்றரி பொருத்தினால் சுமார் 50 கிலோ மீற்றர் தூரம் வரை பயணிக்கலாம்.

எனினும், பற்றரியில் மின்சாரம் குறைவடைந்து போனால் பெடல் மூலமும் இந்த சைக்கிளை இயக்க முடியும். பொதுவாக சந்தையில் மின்சார சைக்கிள் ஒன்று 3இலட்சம் முதல் 3 இலட்சத்து 50ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனாலும், நான் ஒரு இலட்சத்திற்கும் குறைவான செலவில் மேற்படி மின்சார சைக்கிளை தயாரித்துள்ளேன். சைக்கிள் ஒன்றை கொடுத்தால் மிகவும் குறைந்த செலவில் மேற்படி மின்சார சைக்கிளை தயாரித்துக் கொடுக்க முடியும்.

பெரியவர்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் மேற்படி மின்சார சைக்கிளை தயாரிக்க முடியும் எனவும் அப்துல் லதீப் முஹம்மது ரியாஸ் மேலும் தெரிவித்தார்.

# நாட்டில் 3 மணிநேர மின்வெட்டு

மின்வெட்டை அமுல்படுத்தும் வேலைத்திட்டத்துக்கமைய, இன்றும் (04) நாளையும் (05) 3மணிநேர மின்வெட்டு மேற்கொள்ளப்படுமென பொதுப் பயன்பாடுகள் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அதற்கமைய, A,B,C,D,E,F,G,H,I,J,K,L,P,Q,R,S, T,U,V,W ஆகிய வலயங்களில் பகலில் 01மணித்தியாலம் 40 நிமிடமும் இரவில் ஒரு மணிநேரம் 20 நிமிடமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும். கொழும்பு மாநகரப் பகுதியில் காலை 6 மணி முதல் 8.30 மணி வரை 02மணிநேரம் 30 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, M, N, O, X, Y, Z வலயங்களில் காலை 5.30 மணி முதல் காலை 8.30 மணி வரை 3 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வாரத்தில் மூன்று நாட்கள் விசா அலுவலகம் இயங்கும்

## இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவிப்பு

இன்று முதல், வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகரகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய சூழ்நிலையினை கவனத்தில் கொள்ளும் அதேநேரம், எமது விசா சேவையினை பெற்றுக்கொள்ளும் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளின் சௌகரியங்களுக்கு முக்கியத்துவமளித்தும், தொடர்புடைய பணியாளர்களின் பயணங்கள் குறித்த அக்கறையுடனும் எமது விசா விண்ணப்ப முகவர் நிலையமான IVS வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே விசா விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். இதற்கமைய இன்று 04ஆம் திகதி முதல் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்துடன் இன்று திங்கட்கிழமையும் எந்த விதமான முன்பதிவுகளும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும், குறித்த தினங்கள் உயர்ஸ்தானிகராலயத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களாக இருந்தால் அத்தினங்களிலும் எதுவிதமான சேவைகளும் இடம் பெறமாட்டாது.

சகல விசா விண்ணப்பதாரிகளும் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளும்படி வேண்டப்படுவதுடன் மறு அறிவித்தல்வரையில் விசா விண்ணப்பங்களை மேலே கூறப்பட்ட தினங்களில் மாத்திரம் IVS நிலையத்தில் சமர்ப்பிக்கவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய உயர்ஸ்தானிகருக்கு அங்கஜன் எம்.பி.கடிதம்

## யாழ். மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் பெற உதவுமாறு கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அறுவடையை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நிலையில், நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கான 16இலட்சத்து 55ஆயிரத்து 202லீற்றர் மண்ணெண்ணெய் அவசரமாகத் தேவைப்படுகிறது. இவ்விடயம் தொடர்பில் மாவட்ட விவசாயிகள் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்து வரும்நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் அங்கஜன் இராமநாதன் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

அத்துடன், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரின் கவனத்திற்கும் இவ்விடயத்தை அங்கஜன் இராமநாதன் எடுத்துச் சென்றுள்ளார்.

குறிப்பாக, இந்தியாவிலிருந்து 300,000 பரல்கள் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அவற்றை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பி வைத்த கடிதங்களில்,

ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் இல்லாத நிலையில், யாழ்ப்பாண மாவட்ட விவசாயி கள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தியே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். எனவே பயிர்க ளுக்கான நீர்ப்பாசன செயற்பாடுகளுக்காக யாழ்ப்பாணத்தில் 49வீத விவசாயிகள் இன்னமும் எரிபொருளுக்காக காத்திருக்கின்றனர்.

யாழ். மாவட்ட சிறுபோக அறுவடைக்கு 1,655,202.84 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 84,728.46 லீற்றர் டீசல் உடனடியாக தேவைப் படும்நிலையில் விவசாயிகளின் நலன்கருதி அவற்றை உடனடியாக வழங்க ஏற்பாடுகளை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக விவசாய அமைச்சின் செயலாளருக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் கோரிக்கை கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூலை 04ஆம் திகதி, திங்கட்கிழமை

# மகாநாயக்க தேரர்களின் ஆலோசனை நிலைமையை மோசமாக்கக் கூடாது !

நாடு நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போது புதிய திட்டம் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளனர். நெருக்கடிக்குத் தீர்வாக சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்பதே அவர்களுடைய கோரிக்கையாகும்.

அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்து சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அவர்கள் கோரியுள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கம் அமையவேண்டிய விதம் மற்றும் நாட்டின் தற்போதைய பிரச்சினைகளை நிவர்த்திப்பது தொடர்பிலான 10 விடயங்களை உள்ளடக்கி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு சர்வகட்சி அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும், தேவைக்கேற்ப அதனை நீடிக்க வேண்டும் எனவும், அவ்வாறு இடம்பெறாவிட்டால் அரசாங்கமொன்றை உருவாக்க மக்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதானியாக கட்சித் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவிக்கும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சி சார்பற்ற பிரஜை ஒருவரை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு நியமிக்க வேண்டுமெனவும் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 15 ஆக வரையறுக்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு நிபுணத்துவக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனவும் அதன் சிபாரிசுகளை செயற்படுத்த சுயாதீன குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரர், அமரபுர பீட மகாநாயக்கர் தொடம்பஹல ஸ்ரீ சந்திரசிறி தேரர், ராமஞ்ஞ பீட மகாநாயக்கர் மகுலேவே ஸ்ரீ விமல தேரர் ஆகியோர் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

மக்களின் உயிரைப் பாதுகாக்க நிறைவேற்று அதிகாரத்தினால் அல்லது நாடாளுமன்றத்தினால் முடியாவிட்டால், மக்களின் அழுத்தம் மேலும் அதிகரிக்காத வகையில் திறமையான புத்திஜீவிகளுக்கு நாட்டின் அரச நிர்வாகத்தை கையளிப்பது ஒட்டுமொத்த இலங்கைவாழ் மக்களின் பாராட்டுக்கு காரணமாக அமையும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்குப் பதிலாக எதிர்ப்புகளையும் கருத்திற்கொள்ளாது, அடக்கும் அணுகுமுறையை பின்பற்றுவதனால் மக்களின் எதிர்ப்பு மேலும் தீவிரமடைய காரணமாக அமையும் எனவும் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் ஸ்தம்பித்துள்ளது. அத்தியாவசிய சேவைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையில் புதிய அரசாங்கத்தை அமைக்கக் கோரும் மகாநாயக்கர்களின் நோக்கம் என்னவென்பது புரியவில்லை.

தேசிய நெருக்கடியில் இருக்கும்போது அரசியல் மாற்றம் அவசியமானதொன்றல்ல.

அனைத்துத் துறைகளும் முடங்கிப்போயுள்ள நிலையில் அவற்றை எவ்வாறு மீட்பது? மக்களின் பட்டினிச் சாவை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை? ஆகியன குறித்து அவசரமாகச் சிந்திக்கவேண்டிய தருணத்தில் இருக்கிறோம்.

இந்நிலையில், பழையபடி அரசியல் தலைகளை மாற்றிக்கொண்டிருப்பதால் வெறும் நேர விரயமே தவிர, புதிதாக ஒன்றும் நடந்துவிடப்போவதில்லை.

நாட்டில் கடந்த மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னர் அரசியல் ஸ்திரமற்ற தன்மை ஏற்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர் அமைச்சரவை இல்லாமல் நிலைமை மோசமாகியது. அதனால் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புகளுடனும் ஏனைய நாடுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது.

இப்போது மீண்டும் அரசியல் மாற்றம் ஏற்பட்டால் பேச்சுவார்த்தைகள் முதற்கொண்டு அனைத்தும் மீளமைக்கப்படும். இதனால் பிரச்சினைகள் நீளுமே தவிர குறையப்போவதில்லை. மகாநாயக்கர்களின் ஜனாதிபதிக்கான கடிதம் காலம் கடந்த ஞானம்.

சிங்கள முற்போக்கு சக்திகளின் அழுத்தங்களினால், அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு தேரர்கள் இந்த நெருக்கடியான நிலைமையில் ஆலோசனைகளை கூறுவதென்பது தேவையற்ற ஒன்றாகும். மகாநாயக்கர்களின் அழுத்தங்கள் நாட்டை மேலும் பாதாளத்திற்கு தள்ளிவிடுவதாக அமைந்துவிடக்கூடாது.

# பிரதமர் பதவியை ரணில் கைப்பற்றியது இப்படித்தான்...!



★ ஒரு வருடத்துக்கு முன்பிருந்தே திட்டம்
★ திகைப்பூட்டும் சம்பவங்கள்

ஊடகவியலாளர்
எம்.ஐ.முபாறக்

ரணில் விக்ரமசிங்க பிரதமராகி இரண்டு மாதங்கள் பூர்த்தியாகப் போகின்றன.

ஆனால், எமது அரசியல் தலைவர்கள் இப்போதுதான் அவர் எப்படி பிரதமரானார் என்று தேடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த வாரம் நாடாளுமன்றில் இதுபற்றி அவர்கள் கேள்வியெழுப்பியதை அறிவோம்.

அவர் பிரதமர் பதவியைக் கைப்பற்றியது ஒரு சுவாரஸ்யமான சம்பவம். அந்தக் கதையைத்தான் நான் இன்று உங்களுக்கு சொல்லப்போகிறேன்.

இலங்கையின் தற்கால அரசியல் அரங்கில் இருக்கின்ற ஒரு வித்தியாசமான கதாபாத்திரம்தான் ரணில் விக்ரமசிங்க.

அறிவாளி - அமெரிக்க உளவாளி - Mr.கிளீன் - குள்ள நரி - அரசியல் தீர்க்கதரிசி இப்படிப் பல பட்டப் பெயர்கள் அவருக்கு.

இவை அனைத்தும் உண்மைதான்.

நாடாளுமன்றில் ஒரேயோர் உறுப்பினராக இருந்துகொண்டு பிரதமர் பதவியைக் கைப்பற்றுதல் என்பது சும்மா விடயமா?

அதுவும் தோல்வியடைந்து தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு நுழைந்தவர்.

அவர் தோல்வியடைந்த பின் என்ன செய்தார்.?

வீழ்ச்சியிலிருந்து எழுவதற்கு - ஆட்சியை காப்பாற்றுவதற்கு - கட்சியைக் கட்டி எழுப்புவதற்கு அவர் என்னவெல்லாம் செய்தார்?

எப்படியெல்லாம் திட்டம் வகுத்தார்?

பிரதமர் பதவியைக் கைப்பற்றியது எப்படி? அதற்கான வியூகத்தை வகுத்தது எப்போது?

இதுபோன்ற பல சுவாரஸ்யமான விடயங்களை நாம் இதில் பார்க்கப்போகிறோம்.

***ஆட்சியைப் பிடிக்க நாள் குறித்த ரணில்***

2020 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வி. ஓர் ஆசனங்கூட இல்லை.

கிடைத்தது 2.5 இலட்சம் வாக்குகள் மட்டுமே. அதற்காகக் கிடைக்கிறது ஒரு போனஸ் ஆசனம்.

பல மாதங்களாக அது நிரப்பப்படவில்லை. அதற்காக அவசரப்படவில்லை ரணில். அவரது குறியெல்லாம் எப்படி ஆட்சியைக் கைப்பற்றுவது என்பதில்தான்.

ஆராய்கிறார் அரசியல் நிலைவரத்தை. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் உலகை ஆக்கிரமிக்கிறது கொரோனா வைரஸ். இலங்கையையும்தான்.

அதனால் வீழ்ச்சியடைகிறது இலங்கையின் பொருளாதாரம்.

முதலாவது அலை - இரண்டாவது அலை.

இரண்டாவது அலையின் முடிவில் ஒரு முடிவுக்கு வருகிறார் ரணில்.

கட்சியின் கூட்டத்தைக் கூட்டுகிறார். நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி ஆராய்கிறார்.

அப்போது அங்கு முக்கியமான விடயம் ஒன்றைக் கூறுகிறார்.

அவரை இந்த இடத்துக்குக் கொண்டுவந்தது - பிரதமர் ஆசனத்தில் அமர்த்தியது அந்தக் கூற்றுதான்.

அரசியல் தீர்க்கதரிசி என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

என்ன அந்தக் கூற்று...?

2022 ஓகஸ்ட் மாதத்துக்கு முன் இந்த அரசு கவிழும். வரப்போகின்ற பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றல் இந்த ஆட்சியாளர்களிடம் இல்லை. எதிர்க்கட்சிகளிடமும் இல்லை.

மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். அரசுக்கு எதிராகப் போராடுவார்கள். நாட்டில் பெரும் பிரச்சினை ஏற்படும். அந்த சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்தினால் ஆட்சி எம் கையில்..

இதுதான் அந்தக் கூற்று.

எவ்வளவு உண்மையான கூற்று என்று பாருங்கள்.

அவ்வளவு நுணுக்கமாக ஆய்வு செய்தார் நிலைமையை - ஆட்சியாளர்களின் திறமையை.

***முதலில் பிரதமர் பதவி:***
***அடுத்து ஜனாதிபதி பதவி***

இப்போது இறங்குகிறார் களத்தில்...

முதலில் பிரதமர் பதவி. அடுத்து ஜனாதிபதி பதவி.

இதுதான் ப்ளான்.

களத்தில் இறங்கி அவர் செய்த முதல் பணி என்ன தெரியுமா?

ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளில் இருக்கின்ற அதிருப்தியடைந்திருக்கும் எம்.பிக்களை மோப்பம் பிடித்ததுதான்.

பிரதமர் பதவியைக் கைப்பற்றும்போது பெரும்பான்மை தன்னிடம் இருக்க வேண்டும் என்பதே திட்டம்.

அத்தோடு, நுழைகிறார் நாடாளுமன்றுக்கு. 2021 ஜூன் 23ஆம் திகதி.

வந்த உடனே தொடங்குகிறார் சகுனி வேலையை.

எம்.பிக்களை வளைத்துப் போடும் பொறுப்பு வஜிர அபயவர்தனவிடம்.

வெளிநாட்டுத் தூதுவர்களை சந்திக்கும் பணி ரணில் கையில்.

தான் பிரதமராகும்போது வெளிநாடுகளின் உதவி இருந்தால் மட்டுமே பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

அப்போதே அதற்கான வேலையில் - வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்டும் பணியில்.

நாடாளுமன்றத்துக்கு நுழைந்த வேகத்தில் அரசை விமர்சிக்கவில்லை.

பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கிறார். ஆலோசனை வழங்குகிறார். சர்வகட்சி கூட்டத்திலும் கலந்துகொள்கிறார்.

இதெல்லாம் அவரது தந்திரம். அரசை பகைக்காமல் அரசு தன்னை விரும்பும் வகையில் காய் நகர்த்துகிறார்.

உண்மையில் ஜனாதிபதியைக் கவர்கிறது ரணில் இந்த நகர்வு.

***மிரிஹான ஆர்ப்பாட்டம் -***
***இரண்டு மாதங்களுக்குள்***
***ஆட்சி ரணில் கையில்***

இப்படியே செல்கையில் வருகிறது அந்த நாள். ரணில் எதிர்பார்த்த அதிர்ஷ்ட நாள்.

அதுதான் மிரிஹான ஜனாதிபதி இல்லத்தைச் சுற்றி மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

அவதானிக்கிறார் ரணில்.

உடனே கூட்டுகிறார் கட்சிக் கூட்டத்தை. ஆர்ப்பாட்டம் நடக்கும்போதே.

இதுதான் சந்தர்ப்பம். நாம் ஓப்பரேஷனில் இறங்க வேண்டிய சந்தர்ப்பம்.

இன்னும் இரண்டு மாதங்களில் ஆட்சி எம் கையில்.

உசாராக்குகிறார் கட்சி உறுப்பினர்களை.

வஜிர அபயவர்தன - சாகல ரத்நாயக்க - ருவான் விஜயவர்தன - அகிலவிராஜ் காரியவசம் - பாலித ரங்கேபண்டார ....

இப்படி எல்லோரும் களத்தில்.

கலைகிறது அமைச்சரவை. மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி.

ஆனால், மஹிந்த மட்டும் அப்படியே. இராஜினாமா செய்யவில்லை.

அவரும் இராஜினாமா செய்வார் என்றே எதிர்பார்த்தார் ரணில். அது நடக்கவில்லை.

முதலில் அவரை விரட்ட வேண்டும். அப்போதுதான் தான் பிரதமராக முடியும்.

கசக்குகிறார் மூளையை. போடுகிறார் அடுத்த திட்டத்தை

***மஹிந்தவை விரட்ட ரணில் போட்ட ப்ளான்***

அப்போதுதான் உருவாகிறது Go Home Gota என்ற ஜனாதிபதிக்கு எதிரான Tag line.

ஓரிரு நாட்களிலேயே அதே எதிர்ப்பு மஹிந்தவுக்கும்...

அரசிலிருந்து விலகுகிறது ஒரு குழு. அது சுயாதீனக் குழு.

மஹிந்தவும் விலக வேண்டும் என்கிறது அக்குழு.

அந்த எதிர்ப்பின் பின்னணியில் ரணில்.

ரணிலை சந்திக்கிறார்கள் பொதுஜன பெரமுனவின் பின் வரிசை எம்.பிக்கள்.

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

கோரிக்கை விடுக்கிறார்கள் ரணிலிடம்.

முதல் கோரிக்கை அவர்களிடமிருந்துதான்.

தானாகவே தேடி வருகிறது பெரும்பான்மை. சம்மதம் தெரிவிக்கிறார் அவர்களிடம்.

பின்னர் உருவாகிறது கோட்டா கோ கம. சில நாட்களில் மைனா கோ கம.

ஊடகங்கள் - பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் - ஜனாதிபதி இப்படி எல்லோரது கவனமும் இப்போது மஹிந்த மீதுதான்.

எல்லா பக்கமும் கோஷம். மஹிந்தவுக்கு எதிராக. மஹிந்தவை பதவி விலகக் கோரி.

ஒரு பக்கம் ஜனாதிபதி அழுத்தம். மறுபுறம் அக்கட்சி எம்பிக்கள் அழுத்தம். இன்னொரு புறம் ஊடகங்கள்.

இப்படி எல்லோரும் மஹிந்தவுக்கு எதிராகத்தான்.

ஏதோ மஹிந்ததான் இந்த நாட்டின் தலைவர்போலவும், அவர் விலகினால் எல்லாம் சரியாகிவிடும் என்பதுபோலவும், அவரால்தான் இந்த நிலைமை போலவுமே பிரசாரங்கள்.

இதுதான் ரணிலின் சித்து விளையாட்டு. அவர் விலகினால்தானே இவர் நுழைய முடியும்.

எப்படியோ கடும் அழுத்தம். மஹிந்த 9ஆம் திகதி விலகுவதற்குத் தீர்மானம்.

ஆனால், அவருடன் இருந்த சில்லறைகள்தான் அவரைக் குழப்பி வன்முறைக்கு இட்டுச் செல்கின்றன.

இருந்தும், குறிப்பிட்ட அத்தினமே விலகுகிறார் மஹிந்த.

கோட்டாவுக்கு எதிரான - அவரின் அரசுக்கு எதிரான போராட்டம் எனும்போது அதற்குள் மஹிந்தவும்தான் அடங்குகிறார்.

ஆனால், மஹிந்தவை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது ஏன்?

அதுதான் ரணிலின் ப்ளேன். அவர் போனால்தான் ரணில் வரமுடியும்.

ரணிலின் திட்டப்படிதான் மைனா கோ கமவும் உருவாகிறது.

அப்படியே நிறைவேறுகிறது அந்தப் ப்ளேன்.

கட்டங் கட்டமாக நிறைவேறுகிறது ரணிலின் வியூகம்.

இனி இறுதிக் கட்ட நகர்வு.

ரணிலின் வியூகம் இப்படியிருக்க, பிரதமர் பதவியைக் குறிவைத்து இன்னும் சிலரும் களமிறக்கம்.

அவர்கள் யார் என்று பார்ப்போம்.

***பிரதமர் பதவியைப் பறிக்க***
***சஜித் வகுத்த திட்டம்***

ரணில் பிரதமர் பதவியைக் கைப்பற்று வதற்கு இவ்வாறு வியூகம் வகுத்து செயற்பட்டுக்கொண்டிருக்க,

இடையில் புகுந்து அதைத் தட்டிப் பறிக்கும் வேலையில் சஜித்.

இந்நிலையில், பலரின் பெயர்கள் பிரதமர் பதவிக்கு பிரேரிக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கரு ஜயசூரியவின் பெயர்.

இது மஹிந்த விலகுவதற்கு முன்...

கரு எம்.பி. இல்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்.

அவர் பிரதமராக வேண்டும் என்றால் முதலில் எம்.பியாக வேண்டும். அதற்குத் தேவை ஒரு தேசிய பட்டியல் ஆசனம்.

அதை வழங்க முன்வருகிறார் ஒருவர்.

அவர் கருவின் மருமகன். மயந்த திஸாநாயக்க - காமினி திஸாநாயக்கவின் மகன்.

மயந்த திஸாநாயக்கவின் மூத்த சகோதரர் நவீன் திஸாநாயக்க திருமணம் முடித்திருப்பது கருவின் மகளை.

அந்த வகையில், மயந்தவிற்கும் கரு மாமனார் ஆவார்.

ஆனால், கரு ஐக்கிய தேசிய கட்சி. மயந்த சஜித் அணியின் தேசியல் பட்டியல் எம்.பி.

இதில் கட்சி பேதமில்லை. உறவு முறைக்கே முன்னுரிமை.

மாமனார் பிரதமராவார் என்றால் எம்.பி. பதவியை விட்டுக்கொடுப்பதில் தவறில்லை.

முடிவுக்கு வருகிறார் மயந்த.

மயந்த இப்போது இருப்பதோ கனடாவில்.

உடனே தயாராகிறார், நாட்டுக்கு வருவதற்கு. எம்.பி. பதவியை இராஜினாமா செய்து அதை மாமாவுக்கு வழங்குவதற்கு.

சஜித்தின் அனுமதியோடு...

இந்நிலையில், அவருக்குத் தொலைபேசி அழைப்பை எடுக்கிறார் சஜித்.

நீங்கள் வரவேண்டாம். பிரதமர் பிரச்சினையை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

அத்தோடு தடைப்படுகிறது அவரது பயணம்.

பிரதமர் பதவியைத் தான் கைப்பற்றுவதுதான் சஜித்தின் திட்டம்.

அதனால்தான் மயந்தவின் பயணத்தைக் தடுக்கிறார் சஜித்.

***பொன்சேகாவும் களத்தில்:***
***ஜனாதிபதியுடன் சந்திப்பு***

இந்தப் பதவிப் போட்டியில் சரத் பொன்சேகாவும் தப்பவில்லை. அவருக்கும் பிரதமராகும் ஆசை.

முயற்சிக்கிறார் ஜனாதிபதியை சந்திப்பதற்கு.

கைகூடுகிறது சந்திப்பு.

முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, டயானா கமகே எம்.பி. ஊடாக...

பொன்சேகாவை ஜனாதிபதியிடம் அழைத்துச் செல்கிறார் டயானாவின் கணவன் சேனக டி சில்வா .

பொன்சேகாவின் செயலாளராக இருந்தவர் டயானாவின் கணவர் சேனக.

பொன்சேகாமீது அதிக பிரியம் உள்ளவர்.

பொன்சேகாவே ஜனாதிபதியாக வேண்டும் என்று விரும்புபவர்.

கோட்டா - பொன்சேகா சுமார் 2 மணி நேரம் பேச்சு.

பிரதமர் பதவியை ஏற்குமாறு கூறுகிறார் ஜனாதிபதி.

நிபந்தனைகளை விதிக்கிறார் அவரும்.

சஜித் விதித்துவரும் அதே நிபந்தனைதான்.

வெற்றியளிக்கவில்லை அச்சந்திப்பு.

இந்நிலையில்தான் அடுத்த நிகழ்வு. முக்கியமான நிகழ்வு.

அதுதான் மஹிந்தவின் பதவி விலகல்.

இனித்தான் பதவி ஆசையின் உச்சக்கட்டமே.

பிரதமர் பதவிக்கான பலமுனை போட்டி.

மஹிந்த பிரதமர் பதவியிலிருந்து விலகிவிட்டார். உடனடியாக இன்னொருவரை நியமிக்க வேண்டும்.

பல முனைகளிலிருந்து போட்டி இப்போது.

ஒருபுறம் சஜித் அணி. இன்னொரு புறம் சுயாதீன குழு. மறுபுறம் ஐக்கிய தேசிய கட்சி.

ஜேவிபியும் விதிவிலக்கல்ல...

கூடிப் பேசுகின்றன ஒவ்வொரு கட்சிகளும்.

டிரான் அலஸின் அலுவலகத்தில் புதன் கிழமை

[11-05-2022] அன்று சுயாதீன எம்.பிக்கள் கூட்டம்.

(11ஆம் பக்கம் பார்க்க)


## இன்றைய நாளில்...

- 1837 – உலகின் முதலாவது அதிதூர தொடர்வண்டிப் போக்குவரத்து, பர்மிங்காம், லிவர்பூல் நகர்களுக்கிடையே தொடங்கப்பட்டது.
- 1862 – லூயிஸ் கரோல் எலிஸ் லிடெலுக்கு ஒரு கதையைச் சொன்னார். இதுவே பின்னர் எலிசின் அற்புத உலகம் என வழங்கப்பட்டது.
- 1951 – வில்லியம் ஷாக்லி ட்ரான்சிஸ்டரைத் தாம் கண்டுபிடித்ததாக அறிவித்தார்.
- 1997 – நாசாவின் பாத்ஃபைண்டர் விண்கலம் செவ்வாய்க் கோளில் இறங்கியது.
- 1998 – ஜப்பான் நொசோமி விண்கலத்தை செவ்வாய்க் கோளை நோக்கி ஏவியது.

## நக்கல் நமசிவாயம்



# இலங்கையிலுள்ள நெருக்கடி நிலை குறித்து நோர்வே வெளிவிவகார அமைச்சுடன் சாணக்கியன் எம்.பி. பேச்சு!



நோர்வே வெளிவிவகார அமைச்சின் தெற்காசி யாவிற்கான பிரதிப் பணிப்பாளர் சிங்ப்ஜோன் டென்ப்ஜோனுக்கும் (Sigbjorn Tenfjorn) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இரா.சாணக்கியன் நோர்வேக்கு விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் தற்போது காணப் படும் பொருளாதார நெருக்கடிகள், அதனால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பிலும், இவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

# வாக்காளர் இடாப்பில் பெயர்களை பதிவு செய்வதற்கான கால அவகாசம் நீடிப்பு

## கிராம உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

நடப்பாண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை பதிவு செய்துகொள்வதற்கு வாக்காளர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதிவரை சந்தர்ப்பம் உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு கிராம உத்தியோகத்தர் அலுவலகம், பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் உள்ள தேர்தல்கள் அலுவலகங்களில் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தங்களின் பெயர்கள் அதில் உள்ளடக்கப் பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்து தமது பெயர் உள்ளடக்கப்படாதவிடத்து எதிர்வரும் 12ஆம் திகதிக்குள் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை சேர்த்துக்கொள்ள முடியும் என்றும் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. கிராம உத்தியோகத்தரைச் சந்தித்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ள முடியும். இதுதொடர்பான மேலதிக தகவல்களை சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# கெப் வாகனம் யானையுடன் மோதி விபத்து! நடிகர் ஜெக்சன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு




(அநுராதபுரம் செய்தியாளர் )

சிங்கள நடிகர் ஜெக்சன் அந்தோனி உள்ளிட்ட மூவர் பயணித்த கெப் ரக வாகனம், நேற்று முன்தினம் (02) காட்டு யானையொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை இரவு 9.10 மணியளவில் இச்சம்பவம் தலாவ மொறகொட பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த ஜெக்சன் அந்தோனி உள்ளிட்ட மூவரை சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சேர்த்ததன் பின்னர், அந்தோனி உள்ளிட்ட இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் கெப் வாகனத்திற்கும் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளை தலாவ பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சந்திரசிறி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சீனத் தூதுவருடன் சந்திப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங்கை அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

மகிழ்ச்சிப் பரிமாற்றங்களைத் தொடர்ந்து, இலங்கைக்கான சீனாவின் தொடர்ச்சியான உதவிகளை அமைச்சர் பீரிஸ் பாராட்டினார். இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்துள்ள எரிபொருள், உணவு மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தூதுவருக்குத் தெரிவித்தார். இந்த சவால்களை எதிர்கொள்வதற்காக இருதரப்புப் பங்காளிகளும் சர்வதேச முகவர்களும் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஒரே சீனக் கொள்கையில் இலங்கை தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் என சீனத் தூதுவரிடம் உறுதியளித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சீனாவின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான இலங்கையின் தளராத ஆதரவை உறுதியளித்தார்.

ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் பக்க அம்சமாக இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்குத் தேவையான உதவிகள் குறித்தும் 12 நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நிதி உதவி மற்றும் இலங்கையின் கடனை மறுசீரமைத்தல் (சீர்திருத்தம் செய்தல்) மற்றும் மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் தூதுவருக்கு அவர் விளக்கினார்.

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் ஒரே சீனக் கொள்கை தொடர்பான அதன் நிலையான நிலைப்பாட்டை சீனத் தூதுவர் பாராட்டினார்.

இலங்கைக்கு சாத்தியமான எல்லா வகையிலும் உதவிகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் இலங்கையுடன் தொடர்ந்தும் ஈடுபடும் என தூதுவர் குய் உறுதியளித்தார்.



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சீன அரசாங்கத்தின் தளராத ஆதரவிற்காக இலங்கையின் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் சீனத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒருதொகை சிகரெட்டுகள் மீட்பு





வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுகள் சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சிகரெட்டுகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபா என்றும் இந்த சிகரெட்டு தொகை டுபாயிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுங்கப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் விஜித்த ரவிபிரிய உள்ளிட்ட அதிகாரிகளினால் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பலத்த காற்றினால் தென்பகுதி நிலப்பரப்பில் புகுந்தது கடல்நீர்







(பீ.எம் முக்தார்)

தென்பகுதி கடலில் நேற்று முன் தினம் 02ஆம்திகதி மாலை கடல் அலை மிக வேகமாக வீசியதனால் கடல் நீர் கிராமங்களுக்கு புகுந்தது. இதனால் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

காலி வீதியில் வாகனங்களில் பயணித்தோரும் இதனால் அச்சமடைந்தனர்.

பேருவளை - மருதானை பகுதியிலும் வீசிய கடல் அலையினால் கடற்கரையை அன்றிய வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்தமை குறிப்பிடத்தக்கது.



# மலேசியாவில் இடம்பெற்ற தென்கிழக்கு ஆசிய உலமாக்களின் சர்வதேச மாநாடு








(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தென்கிழக்கு ஆசிய உலமாக்களின் சர்வதேச மாநாடு அண்மையில் மலேசியாவின் கோலாலம்பூர் ஏழு நட்சத்திர சன்வே கொலிடே றிசோர்ட் ஹோட்டலில் மலேசியப் பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாகூப் தலைமையில் இடம்பெற்றது.

சவுதி அரேபியாவின் மக்கா உலக முஸ்லிம் லீக் ஏற்பாடுசெய்த இந்த மாநாட்டில் சவுதி அரேபியா உட்பட ஆசியாவின் 16 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

உலக முஸ்லிம்கள் ஏனைய சமய மக்களுடன் எவ்வாறு ஒற்றுமையான இன நல்லிணக்கத்துடன் வாழ்வது என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற மாநாட்டில் பேசிய பிரமுகர்கள், முஸ்லிம்கள் ஏனையவர்களுடன் சமாதானமாகவும், சமுக ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்தியுள்ளனர்.

மக்கா உலக முஸ்லிம் லீக்கின் செயலாளர் நாயகம் கலாநிதி முஹமட்பின் அப்துல் கரீம் அல்-ஈஸா உட்பட பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் இலங்தையின் பிரதிநிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார், ஹஜ் குழுத் தலைவர் அர்க்கம் உவைஸ், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் பிரதிநிதிகளான அஷ்-ஷெய்க் மௌலவி அர்க்கம் நூராமித், அஷ்-ஷெய்க் எம்.ரி.தாஸிம், மௌலவி கொழும்பு ரைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் மலேசியப் பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாகூப், மக்கா உலக முஸ்லிம் லீகின் செயலாளர் நாயகம் கலாநிதி முஹமட்பின் அப்துல் கரீம் அல்-ஈஸா, மலேசிய முஸ்லிம் விவகார அமைச்சர் அஹமட் இத்ரீஸ் மற்றும் இலங்கை சார்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் உள்ளிட்ட பல பிரமுகர்கள் உரையாற்றினர்.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அப்துல்லா சகீட்டின் விசேட செய்தியும் வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொல்பொருள் பெறுமதிமிக்க புத்தர் சிலையுடன் கைதான சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(அநுராதபுரம் செய்தியாளர் )

தொல்பொருள் பெறுமதிமிக்க தங்கம் என சந்தேகிக்கப்படும் புத்தர் சிலையொன்றினை நான்கு கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகைக்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 14ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி கஹட்டகஸ்திகிலிய நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மொறகொட, உணகொள்ளாவ, மெகொட வெவ பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தொல்பொருள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையொன்றினை மிக விரைவில் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்படி மொறகொட பொலிஸாருக்கு நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வவுனியா முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வு தகவலொன்றுக்கமைய கடந்த 29ஆம் திகதி இரவு மொறகொடவெவ பகுதி வீடொன்றில் வைத்து புத்தர் சிலையை கைப்பற்றியுள்ளதுடன், சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறகொட பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




**கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதரகம், ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள ஸாயிட் தொண்டு மற்றும் மனிதாபிமான நிறுவனத்தின் அனுசரணையுடன், இலங்கையிலுள்ள 10 முஸ்லிம்களுக்கு இவ்வருடம் ஹஜ் கடமையை நிறைவேற்ற விமான டிக்கட் தங்குமிட வசதிகளை போன்ற ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டது. (படம்-அஷ்ரப் ஏ சமத்)**


1990 ஆம் ஆண்டின் 4-ம் இலக்கவங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9-ம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) – ரண்பொகுனுகமகிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்தஏலவிற்பனை**

நைவலயைச் சேர்ந்தபின்கமகேபிர சன்னகுணரத்னகடப்பாட்டாளராகவும் / ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பாகபிரசித்தநொத்தாரிசு ஞ.மு. வீரசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.08.13ஆந் திகதியிடப்பட்ட 247ஆம் இலக்கமற்றும் பிரசித்த நொத்தாரிசு W.A.R.J. வெல்லப்பிலியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.23 ஆந் திகதியிடப்பட்ட 1355ஆம் இலக்க 2016.08.23 ஆந் திகதியிடப்பட்ட 1100ஆம் இலக்கஈட்டுமுறியின் மீதானவருமதியானகொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்களாதலால்,

**2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலிவீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கோவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கானகண்டிப்பானவழிகாட்டுதலுக்கேற்பநடாத்தப்படும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹாமாவட்டத்தில் கம்பஹாபதிவுப் பிரிவில், அளுத்குருகோரளவின் தாசியாபத்துவில் மினுவங்கொடபிரதேச சபை எல்லைக்குள் மற்றும் பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ளநைவலமேற்கு 99/1 இலக்ககிராமசேவகர் பிரிவிற்குள் நைவலகிராமத்தில் அமைந்துள்ளகாணி,உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியு.எஸ்.எஸ். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2003.07.03ஆந் திகதியிடப்பட்ட 5020ம் இலக்கவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளநைவலவத்தஎனஅழைக்கப்படும் காணியில் லொட் 23 எனஅடையாளமிடப்பட்ட (2003.05.29 ஆந் திகதியிடப்பட்ட 4994ஆம் இலக்கவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளலொட் 1 இல் மறு அளவீடுமற்றும் உப பிரிவொன்றாகிய) பிரிக்கப்பட்டமற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் விஸ்தீரணத்தில் பதினாறு பேர்ச்சஸ் (ஏ0.ரூ0.பே.16) விசாலமுடைய காணி மற்றும் கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதிலுள்ள சகலதும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் W.S.S. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2003.07.03 திகதியிடப்பட்ட 5020ஆம் இலக்கவரைபடத்தில் காட்டப்பட்டுள்ளகாணித்துண்டுகள் 06, 13 மற்றும் 27 ஆகியவற்றின் மேலானதும் உடனானதுமான வழியை உபயோகிக்கும் உரிமையுடன் சேர்த்து.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:–** ரண்பொகுனுகம செலான் வங்கிக் கிளைவளாகத்திலிருந்து அத்தனகல்ல-நிட்டம்புவ வீதியால் நிட்டம்புவ ஊடாக சுமார் 2 கிலோமீற்றர் தூரம் பயணிக்கும்போது நிட்டம்புவ நாற்சந்தியை அடையலாம். அங்கிருந்து நிட்டம்புவ-வெயாங்கொட வீதியில் சுமார் 4.3 கி.மீற்றர் தூரத்தில் வெயங்கொட உள்ளது. வெயங்கொடயிலிருந்து வெயங்கொட-நீர்கொழும்பு வீதியால் சுமார் 3.2 கி.மீற்றர் சென்றதும் நைவல நாற்பக்கவீதிச் சந்திவரை சென்று நீர்கொழும்புப் பக்கத்துக்கு 50 மீற்றர் தூரம் சென்று வலதுபக்கத்தில் வீதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியினூடாக சுமார் 100 மீற்றர் சென்றதும் இடதுபக்கத்தில் இவ்விடம் அமைந்துள்ளது.

**தீர்மானமுடிவுஅறிவித்தல்கள்:** 2021.04.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயகசோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021.03.16 ஆந் திகதிய டெய்லி மிரர், அத மற்றும் தமிழ் மிரர் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.–** உத்தேசகொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களைபணமாகஏலதாரருக்குச் செலுத்தவேண்டும்.

(1) கொள்வனவுவிலையின் 10% (2) உள்ளூராட்சிமன்றவரி 1%
(3)ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோவிதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளைமேற்கொள்ளவும்.
பிரதான முகாமையாளர், (சட்டம்),செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90,காலிவீதி,கொழும்பு 03.
தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456479, 011-2456473.

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடாத்துவதற்கும்/இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**சந்திமாபிரியதர்ஷனிகமகே,**
**நீதிமன்றஆணையாளர்,விலைமதிப்பீட்டாளர்**
**மற்றும் உரிமம் பெற்றஏலதாரர்.**

**இல. 9–i, ஹைலெவல் வீதி,**
**சர்வோதயமாவத்த,பனாகொட,ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 071 4318252**

# மலையகத்தில் கடும் மழையுடனான காலநிலை; ஆங்காங்கே மண்சரிவு: குடியிருப்புகளுக்குள் வெள்ளம்

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் உயர்வு - மக்கள் பெரும் அவதி











(எம்.கிருஸ்ணா, க.கிருஷாந்தன், இரா.யோகேசன்)

மலையகத்தில் பெய்துவரும் அடை மழை காலநிலையால் வெள்ளப்பெருக்கெடுத்துள்ளதுடன் ஆங்காங்கே மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

நேற்று(03) அதிகாலை முதல் பெய்துவரும் காற்றுடன் கூடிய அடை மழையினால் நுவரெலியா மாவட்டம் தியகல - நோட்டன் வீதியில் மண்மேடுடன் கற்பாறைகள் சரிந்து வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதி போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் மஸ்கெலியா - நோட்டன் பிரதான வீதியில் நான்காம் கட்டைப்பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரொசல்ல ஹைய்ட்றி தோட்டப்பகுதியிலுள்ள ஆறு பெருக்கெடுத்துள்ளமையினால் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளநீர் புகுந்துள்ளமையினால் குடியிருப்புகள், உடைமைகள் சேதமாகியும், வீட்டு வளர்ப்புப் பிராணிகளும் உயிரிழந்துள்ளன. இதனால் வீட்டில் வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

வட்டவளை நகரத்திற்குட்பட்ட பகுதியில் கடும் மழை காரணமாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இதனால் ஆற்றின் இருபுறங்களிலும் வாழ்ந்து வரும் மக்கள் மிக அச்சத்துடன் இருப்பதாக தெரிவிக்கின்றனர். மேலும், பிரதான வீதிகளில் மூடுபனி காணப்பட்டதால் வாகன சாரதிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. மேலும் தொடர்ச்சியான பனி மூட்டங்கள் நிலவுவதால் வாகன சாரதிகள் வாகனங்களை மிக அவதானத்துடன் செலுத்த வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

நோட்டன் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்ந்து நீர்வழிந்தோடுவதுடன் காசல்றீ, மேல்கொத்மலை மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளன.

# நுவரெலியாவில் விவசாய ஊக்குவிப்பு நடவடிக்கை



(மஸ்கெலியா நிருபர்)

உணவுப் பொருட்களை சேமிக்கும் திட்டமும், விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையிலான நிகழ்வும் நுவரெலியா பெரக்கும்பர பகுதியில் முதற்கட்ட பணி நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபடவின் தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளில் வீட்டுத் தோட்டத்தை செய்யவும், அதில் அதிகமாக சோளம், மிளகாய், பயறு, கடலை போன்ற தானிய வகைகளுடன் ஏனைய நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ளும் மரக்கறி வகைகளையும் உற்பத்தி செய்து அதனை மீளப்பெற்று சந்தைப்படுத்தும் நோக்கில் பல இடங்களில் அதற்கான நிலையங்களை அமைக்கவுள்ளதாக நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட தெரிவித்தார்.

நேற்றைய தினம் இந்நிகழ்வில் வீட்டுத் தோட்டம் செய்பவர்களுக்கு கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கிவைக்கப்பட்டன.

# கடற்படை ஒழுக்க விதிமுறைகளை மீறி பெற்றோல் கொள்வனவு

## முன்னாள் கடற்படை வீரருக்கு ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணை

(கம்பளை யோகா)


கடற்படை சீருடையினை பயன்படுத்தி 45லீற்றர் பெற்றோலினை பெற்றுக்கொண்ட முன்னாள் கடற்படை வீரர் ஒருவரை கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

கடற்படை சேவையின் பின்னர் அதிலிருந்து விலகியிருக்கும் கம்பளை அங்கம்மன பிரதேசத்தைச் சேர்ந்த கடற்படை வீரர் ஒருவருக்கே குறித்த பிணை வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பொதுமக்கள் நாட்கணக்கில் வரிசையில் காத்திருந்து எரிபொருளினை பெற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில், மேற்குறிப்பிட்ட சந்தேக நபர் சில தினங்களுக்கு முன்னர் கம்பளை - கண்டி வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திற்கு கடற்படை சீருடையுடன் வந்து கடற்படைக்கு சொந்தமான படகு ஒன்றுக்கு தேவையென கூறி கேன் ஒன்றில் 45லீற்றர் பெற்றோலினை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேற்குறிப்பிட்ட சந்தேக நபர் கடற்படை ஒழுக்க விதிமுறைகளை மீறி தன் சொந்த தேவைக்காக சீருடையுடன் வந்து பெற்றோல் பெற்றுக்கொண்டது தொடர்பாக தலாத்துஓயா கடற்படை முகாம் பொறுப்பதிகாரி புவனேக ஆதித்ய விஜேவிக்கிரமவுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து, அவர் கம்பளை பொலிஸாருக்கு வழங்கியதகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே அவர் மேற்படி ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

# கனத்த மழை காரணமாக நீர்வரத்து அதிகரிப்பு



(செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் நேற்றுமுன் தினம்(02) பெய்த கனத்த மழை காரணமாக நீர்த்தேக்கத்தின் நீர்வரத்து அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் கென்யோன் நீர் மின் உற்பத்தி நிலைய பகுதியில் உள்ள கென்யோன் நீர்த்தேக்க வான் கதவுகள் நேற்று(03) காலை 10 மணிக்கு திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் தாழ்நிலப் பகுதியில் வாழும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர் மின் நிலைய அதிகாரி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், நேற்றுமுன்தினம் இரவு முதல் கனத்த மழை பெய்து வருகிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் இந்த நீர்த்தேக்கம் நிறைந்துள்ளதால் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

மழை குறையும் பட்சத்தில் வான் கதவுகள் மூடப்படும் என அவர் தெரிவித்தார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் வேலைத்திட்டம் மத்திய மாகாணத்தில்



(கண்டி நிருபர்)

எதிர்கால உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் மத்திய மாகாணத்தை தயார்படுத்தும் நடவடிக்கைகள் பல இடம்பெற்று வருகின்றன. மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் வழிகாட்டலில் இவை இடம்பெற்று வருகின்றன.

மத்திய மாகாண விவசாயப் புத்தாக்க உணவுப் பயிர்ச் செய்கை என்ற வேலைத்திட்டத்தின் கீழ் இவை இடம்பெறுகின்றன. மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அஜித் பிரேமசிங்க தலைமையில் அண்மையில் சில வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி பல்வேறு பயிர்கள் இங்கு பயிரிடப்பட்டன. இந்நிகழ்வில் கல்வியமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# பொகவந்தலாவையில் குளவிக்கொட்டுக்கு இலக்கான நால்வரில் ஒருவர் உயிரிழப்பு



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

பொகவந்தலாவை மேற்பிரிவு தோட்டப் பகுதியில் உள்ள 17ஆம் இலக்க வனப்பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற நான்கு பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 01ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், 17ஆம் இலக்க வனப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றபோது மரத்தில் இருந்த குளவிக் கூட்டினை கழுகு ஒன்று தாக்கியதால் குளவிகள் கலைந்து இவர்களை கொட்டியுள்ளது.

குளவிக் கொட்டினால் பாதிக்கப்பட்ட நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அதில் ஒருவர் கடுமையான தாக்குதலுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் பொகவந்தலாவை கீழ்ப்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை சிக்கன் பத்மநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் பொகவந்தலாவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, குளவி கொட்டுக்குள்ளான மற்றைய மூவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்ற அதேவேளை, சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த சிவனொளிபாதமலை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கொட்டப்பட்டிருந்த குப்பைகளை சேகரித்து அகற்றும் சிரமதானப்பணி சிவனொளிபாதமலை தளத்தின் பொறுப்பாளரும் அதன் காவலருமான டி. பி. சியாசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது. நல்லதண்ணி வனவிலங்கு தள பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளும் இந்த சிரம தானப் பணியில் கலந்து கொண்டனர். (தலவாக்கலை நிருபர்)**

# ஹட்டன் செனன் ஜிடி பிரிவுக்கு நலன்புரி கூடாரம் வழங்கிவைப்பு



ஜிடி பிரிவுக்கு நலன்புரி கூடாரம் ஒன்றை வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஹட்டன் செனன் தோட்ட தொழிலாளர் தேசிய முன்னணியின் உப தலைவரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான மு.ராம், ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் உறுப்பினர் பாலா, தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன் அமைப்பாளர் ஜெஸ்டின், உதயகுமார் எம்.பியின் செயலாளர் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பசறையில் சிறிய ரக லொறி பாலத்தின் மீது மோதி விபத்து: அறுவர் காயம்

(பதுளை நிருபர்)




பதுளை - பசறை பிரதான வீதியில் பசறை பால் சேகரிக்கும் நிலையத்துக்கு அருகில் உள்ள பாலத்தில் மோதி சிறிய ரக லொறியொன்று நேற்றுமுன்தினம்(02) அதிகாலை விபத்துக்குள்ளானதில் அறுவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மடுல்சீமை, பட்டவத்தை தோட்டத்தில் உத்தியோகத்தர்களாக கடமை புரிபவர்கள், பலாங்கொடையிலுள்ள மரண வீடொன்றுக்கு சிறிய ரக லொறி ஒன்றில் சென்று, மீண்டும் மடுல்சீமை பட்டவத்தைக்கு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் பசறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு அங்கஜன் எம்.பி. கடிதம்


Angajan Ramanathan, M.P.
OFFICE OF THE DEPUTY CHAIRMAN OF COMMITTEES, PARLIAMENT

30.06.2022

Hon. Bandula Gunawardane,
Minister of Transport & Highways,
Ministry of Transport & Highways
7th Floor, Sethsiripaya Stage II,
Battaramulla,

Hon. Minister,

Subject: Transport essential food and Medical Items through the railway- Colombo to Jaffna and Jaffna to Colombo.

Traders in the Jaffna district have previously transported essential food items from Colombo to Jaffna and from Jaffna to Colombo in a number of Lorries.

Unfortunately, under the current economic crisis, the supply of fuel has been completely stopped and traders in Jaffna District have not been able to do so.

Now the crisis has worsened and the common people are in dire straits due to the shortage of essential goods.

*In view of the urgent need of the issue, I humbly request you to immediately make the necessary arrangements to transport essential goods by rail at concessionary prices.*

Traders in the Jaffna district need around ten or twelve railway wagons for transportation and they are prepared to pay the cost for it.

Your Kind cooperation is very much appreciated.

Thank you.

Angajan Ramanathan M.P
Deputy Chairman of Committees – Parliament
Chairman, District Coordinating Committee, Jaffna.

(யாழ். நிருபர்)

யாழ். - கொழும்புக்கிடையிலான அத்தியாவசிய உணவு, மருந்துப்பொருள் விநியோகத்துக்காக தற்போதைய நிலையில் மாற்றுவழிகளை ஏற்பாடுசெய்து தருமாறு யாழ். வணிகர் கழக பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அமைச்சருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில்,

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் இதுவரைகாலமும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்வதற்காக ஏராளமான லொறிகளை பயன்படுத்தினர்.

துரதிர்ஷ்டவசமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் யாழ். மாவட்ட வர்த்தகர்கள் லொறிகளை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

தற்போதைய நெருக்கடி நிலையானது மேலும் மோசமடைந்து, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தகர்களுக்கு போக்குவரத்துக்காக சுமார் பத்து அல்லது பன்னிரெண்டு புகையிரதங்கள் தேவைப்படுவதால் அதற்கான செலவை அவர்கள் செலுத்தத் தயாராகவுள்ளனர்.

எனவே, இப்பிரச்சினையின் அவசரத் தேவையைக் கருத்திற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்களை புகையிரதம் மூலம் சலுகை விலையில் கொண்டுசெல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# சிறப்பாக இடம்பெற்ற மன்னார் மடு அன்னையின் ஆடித் திருவிழா






(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மடு அன்னையின் ஆடித் திருவிழா நேற்று முன்தினம் (02) காலை இடம்பெற்றது.

மடு திருத்தலத்தின் திருவிழா கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நவ நாள் ஆராதனைகளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெற்றதோடு, பக்தர்களுக்கு திருச்சொரூப ஆசியும் வழங்கப்பட்டது.

மடு அன்னையின் அருளைப் பெறுவதற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது.







திருக்கேதீஸ்வரம் பாலாவி தீர்த்தக்கரை அருகே நேற்று திறந்துவைக்கப்பட்ட சிவன் சிலை (யாழ்.நிருபர்)

# அரச பஸ்ஸில் கொள்ளை

(பைஷல் இஸ்மாயில்)

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் பயணித்த மூவர் பஸ்ஸின் நடத்துனரைத் தள்ளிவிட்டு கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் பயணித்த மூவர் பஸ்ஸின் நடத்துனரைத் தள்ளி விட்டு அவரிடமிருந்து 59ஆயிரத்து 177ரூபா பணத்தினைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

மூவரும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்து உமையாள்புரம் பகுதியில் பஸ்ஸிலிருந்து இறங்கியுள்ளனர். அவர்கள் இறங்குவதற்காக நடத்துனர் இடம் விட முற்பட்டபோது அவரைத் தள்ளிவிட்டு அவரிடமிருந்த பணத்தினைப் பறித்துக்கொண்டு ஓடியுள்ளனர்.

அவர்கள் இறங்கிய இடத்தில் வேறு சிலரும் காத்திருந்ததாக பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கைதடி அரச முதியோர் இல்லப் பணியாளர்களுக்கு பெற்றோல் வழங்காமையால் குழப்பநிலை

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரியில் கைதடி அரச முதியோர் இல்ல சுகாதாரப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்காமையால், பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக பெற்றோல் விநியோகிக்கும் பணி இடைநடுவே கைவிடப்பட்டது.



சாவகச்சேரி பல்நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (01) சுகாதாரப் பணியாளர்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டுவந்த நிலையில், அதே வரிசையில் காத்திருந்த கைதடி முதியோர் இல்லப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்க மறுத்ததால் குறித்த பணியாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலைய முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த அரச முதியோர் இல்லப் பணியாளர்கள் தமது பணிப்பாளரின் கையொப்பத்துடன், உரிய அனுமதி அட்டை வைத்திருந்தும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சாவகச்சேரி வைத்தியசாலை அத்தியட்சகருக்கு எரிபொருள் வழங்க மறுத்ததால் குறித்த குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பாக முதியோர் இல்லப் பணியாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களை நம்பி ஏராளமான முதியவர்கள் இல்லத்தில் காத்திருக்கின்றனர். அவர்களை பராமரிப்பதற்கான எரிபொருள் பெறவே இங்கே நான்கு மணி நேரமாகக் காத்திருக்கிறோம். ஆனால் எமக்கு எரிபொருள் வழங்க மறுக்கப்படுகிறது. தனியார் மருத்துவமனைப் பணியாளர்கள் எந்தத் தடையுமின்றி எரிபொருள் நிரப்பிச் செல்கின்றனர் என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

முதியோர் இல்லப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பெற்றோல் விநியோகம் இடைநிறுத்தப்பட்டு வரிசையில் காத்திருந்த அனைவரும் இராணுவம் மற்றும் பொலிஸாரால் அகற்றப்பட்டிருந்தனர். உரிய அனுமதி அட்டையுடன் வரிசையில் நின்றும் எரிபொருள் கிடைக்காததால் முதியோர் இல்லப் பணியாளர்கள் 40இற்கும் மேற்பட்டவர்கள் மோட்டார்சைக்கிளை உருட்டிக்கொண்டு கைதடி நோக்கி தமது பணியிடத்திற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். - அச்சுவேலி தனியார் பஸ்கள் சேவையில் இருந்து விலகின

(யாழ். நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையில் (டிப்போ) நீண்ட நாட்களாக காத்திருந்தபோதிலும், தமக்கான எரிபொருளை உரிய முறையில் வழங்காததால் தாம் சேவையிலிருந்து விலகியுள்ளதாக அச்சுவேலி தனியார் பஸ் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலிக்கு இடையிலான தனியார் பஸ் சேவைகள் இடம்பெறாத காரணத்தினால் பயணிகள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர். டீசல் தட்டுப்பாடு மற்றும் தமக்கான டீசலை உரிய முறையில் வழங்காமை ஆகியவை காரணமாக பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அதனால், பாடசாலை போக்குவரத்து சேவை, அத்தியாவசிய சேவைகளிலிருந்து தாம் விலகியுள்ளதாகவும் தனியார் பஸ் வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

சேவைகளை இடைநிறுத்தியுள்ளமையால், சாரதி, நடத்துனர்கள் பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அச்சுவேலி தனியார் பஸ் சேவையில் 60 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுவந்த நிலையில் தற்போது ஆறு பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுவதாக சங்கத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் பதுக்கிவைத்திருந்த எரிபொருள் மீட்பு



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சியில் பதுக்கிவைத்திருந்த 950லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் 800லீற்றர் டீசல் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரடிப்போக்கு சந்திப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் எரிபொருள் விற்பனை இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி மாவட்ட சட்டவிரோத குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் மெதவலவின் கட்டளைக்கமைய நேற்று முன்தினம் (01) உபபரிசோதகர் குமாரசிங்க தலைமையிலான குழுவினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு மேற்படி பதுக்கிவைக்கப்பட்டிருந்த எரிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த கிளிநொச்சி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடமாகாணத்தில் பழைய சைக்கிள்களை வாங்குவதற்கு மக்கள் முண்டியடிப்பு

(யாழ். நிருபர்)



இரும்புக் கடைகளில் பழைய சைக்கிள்களை வாங்குவதற்கு மக்கள் முண்டியடிக்கும் சம்பவங்கள் வடமாகாணம் முழுவதும் நடந்து வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை, விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றால் மக்கள் மத்தியில் சைக்கிள் பயன்பாடு அதிகம்.

புதிய சைக்கிள்களின் விலைகள் 85 ஆயிரம் தொடக்கம் 90 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

இறக்குமதியின்மையாலும் கடும் கிராக்கி நிலவுகின்றது. புதிய ஜப்பான் சைக்கிள் ஒன்றில் விலை 60ஆயிரத்தை கடந்துள்ளது. அதேவேளை, நாளுக்கு நாள் அதன் விலையும் அதிகரித்து செல்கின்றது.

இந்நிலையில், இரும்புக் கடைகளில் எடைக்காக விற்கப்பட்ட சைக்கிள்களைப் பெற்று சீரமைத்து பயன்படுத்த மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனால் புதிய சைக்கிள்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. புதிய சைக்கிளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மீண்டும் இரும்பு கொள்வனவு செய்யப்பட்ட இடங்களிற்கு சென்று அதனை மக்கள் வாங்கி வருகின்றனர். ஆனால், தற்பொழுது அதன் பெறுமதி குறைந்து 10ஆயிரம் ரூபாவாக காணப்படுகின்றது.

அதனை பெற்றுக்கொண்டு சீரமைப்பதற்காக மேலும் 20ஆயிரம் ரூபாவரை செலவு செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர் மீது தாக்குதல் முயற்சி

(வவுனியா நிருபர்)



வவுனியா, 4ஆம் கட்டை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒன்லைன் பதிவு நடவடிக்கையை ஒழுங்குபடுத்தி மேற்கொண்ட பிரதேச செயலக உத்தியோகத்தர் மீது தாக்குதல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (01) மாலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, 4ஆம் கட்டை ஐ.ஓ.சி. நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகம் கடந்த இரு தினங்களாக இடம்பெற்றன. இதன்போது நபரொருவர் தனது மோட்டார்சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்ப வந்தபோது குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை (30.06) இங்கு எரிபொருள் நிரப்பியதாக தெரிவித்து அங்கு கடமையிலிருந்த பிரதேச செயலக உத்தியோகத்தர் திருப்பி அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து, கடமை முடிந்து குறித்த உத்தியோகத்தர் எரிபொருள் நிரப்பு நிலையத்தை விட்டு தனது மோட்டார்சைக்கிளில் வெளியேறியபோது அந்த உத்தியோகத்தரை முற்றுகையிட்ட சிலர் அவரை தகாத வார்த்தையால் பேசி தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தனர். இதன்போது குறித்த உத்தியோகத்தர் அவர்களிடமிருந்து மோட்டார்சைக்கிளில் தற்துணிவுடன் தப்பிச் சென்றிருந்தார்.


திகதி 01.07.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4803
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,714,220.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 3 6 4 3 1 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,126,485.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1281
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,443,120.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 5 4 6 1 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3045
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,376,720.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 10 19 36 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,793,065.60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 833
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,807,520.00
வெற்றி இலக்கினம் P வெற்றி இலக்கங்கள் 08 09 62 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 116,960,604.00

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 112
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,940,800.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 32 38 51 61 விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,724,676.60

கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1151
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,916,780.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 259,345,670.00
O 03 வெற்றி எண்கள் 04 26 53 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011 4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 02.07.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4804
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,340,230.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 3 9 1 3 4 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,302,203.60

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1282
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,451,720.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 7 1 9 8 8 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,038,533.60

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3046
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,153,140.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 37 41 65 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,885,793.60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 834
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,671,440.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 07 11 54 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,129,554.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 113
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,649,240.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 44 58 59 61 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,730,153.40

கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1152
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,568,580.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 259,345,670.00
Q 20 வெற்றி எண்கள் 02 20 57 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கல்வி அமைச்சின் அறிக்கைக்கு முரணான கிழக்கு ஆளுநரின் செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

(திருகோணமலை நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு முரணாக கிழக்கு மாகாண ஆளுநரின் செயற்பாடு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது எனவும் கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளை வழமைபோன்று நடத்தவேண்டுமாயின் அரச சேவைகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஊடாக அதிபர், ஆசிரியர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு வழங்கவேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகள் வாரத்தின் மூன்று நாட்கள் நடத்துவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் (02) திருகோணமலை ஊடக இல்லத்தில் இடம்பெற்றபோதே இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் திருகோணமலை மாவட்ட செயலாளர் ரோஷன் அக்மிமன்ன தெரிவித்தார்.

மேலும் கல்வி அமைச்சினால் கடந்த மாதம் 27ஆம் திகதிமுதல் ஜூலை மாதம் 10ஆம் திகதிவரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் வழமைபோன்று இயங்குமென மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயம் - என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் ந.ஜெயதீபன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு மேலாக மாகாண கல்வி பணிப்பாளரினால் சுற்றுநிரூபம் ஒன்றின் மூலம் பாடசாலை நடத்துவதற்கு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தால் ஆசிரியர்கள் நாங்கள் வழமைபோன்று பாடசாலைக்கு சமுகமளித்திருப்போம். ஆனால், எந்தவொரு சுற்றுநிரூபத்தின் ஊடாகவும் அறிக்கை வெளியிடப்படாமல் ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் எனும் கோரிக்கையினை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வன்மையாக கண்டிப்பதாகவும் இவ்வாறு விடுமுறை காலங்களில் பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர்களின் விடுமுறையை பொது




விடுமுறையாக அறிவிக்க வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் ந.ஜெயதீபன் கோரிக்கை விடுத்திருந்தார்.

மேலும், கிழக்கு மாகாண ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க கிழக்கு மாகாண கல்வி செயலாளரினால் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் வாரத்தில் மூன்று நாட்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டமை வேடிக்கையான விடயம் எனவும் எரிபொருள் தட்டுப்பாடான இந்தச் சூழ்நிலையில் திரைப்படங்களில் வருவதுபோன்று கம்பளிகளிலும் தும்புத்தடிகளிலும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாது எனவும் முதலில் ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான மாற்றுவழியை செய்துவிட்டு பாடசாலைகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்ற அறிக்கையினை வெளியிட்டால் வாரத்தில் 5 நாட்களும் பாடசாலைக்குச் சென்று அதிபர், ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்குத் தயாராகவுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் ந.ஜெயதீபன் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணமாக இருந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினரை பாதுகாப்பதற்காக பதவிக்கு வந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் நாட்டை இன்னமும் நாசமாக்கி குட்டிச்சுவராக்கி சீரழித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே, நாட்டு மக்கள் அனைவரும் நமது சுதந்திரத்திற்காக இந்த அரசியல்வாதிகள் வீடுசெல்ல வீதிக்கு இறங்கிப் போராட முன்வர வேண்டும் எனவும் இதன்போது அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. வாழைச்சேனையில் வீடு உடைத்து திருடிய திருடனை மடக்கிப்பிடித்த மக்கள் நையப்புடைப்பு

## 3 கையடக்கத் தொலைபேசி, ஏ.ரி.எம். வங்கி அட்டைகள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் வீடு ஒன்றின் கூரையை உடைத்து வீட்டிற்குள் உள்நுழைந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று முன்தினம் (02) அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் அனைவரும் உறங்கிய நிலையில், அதிகாலை 2 மணிக்கு வீட்டினுள் சத்தம் ஒன்று கேட்டதையடுத்து விழித்துக்கொண்ட வீட்டு உரிமையாளர் உடனடியாக எழுந்து சத்தமின்றி அவதானித்த போது கொள்ளையன் ஒருவர் வீட்டினுள் இருப்பதைக் கண்டு உடனடியாக அயலவர்களின் உதவியுடன் குறித்த கொள்ளையன் அங்கிருந்து தப்பி ஓடமுடியாமல் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்து நையப்புடைத்தனர்.

இதனையடுத்து மடக்கிப்பிடித்த கொள்ளையனை பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து குறித்த கொள்ளையன் கிழக்கில் பல கொள்ளைகளுடன் தொடர்புடைய அம்பாறை இறக்காமத்தைச் சேர்ந்த 22 வயதுடையவன் எனவும் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை உட்பட பல பிரதேசங்களில் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக 20இற்கு மேற்பட்ட வழக்குகள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

மேலும் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் காத்தான்குடி பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி கடை ஒன்றை உடைத்து அங்கிருந்து 75இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி கொள்ளைச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு 3 மாதங்கள் சிறையில் இருந்த நிலையில், நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதாகவும் காத்தான்குடி பிரதேசத்தில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்து வந்துள்ளதாகவும் அங்கிருந்து 3 கையடக்கத் தொலைபேசிகள் ஏ.ரி.எம். வங்கி இயந்திர அட்டைகளையும் அவனிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# அம்பாறை மாவட்டத்தில் பரவலாக பயன்படுத்தும் மின்சேமிப்பு சைக்கிள்





(பாறுக் ஷிஹான்)

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பிரச்சினை இன்றைய சூழலில் காணப்படுவதனால் பொதுமக்கள் மாற்று யுக்தியுடைய பல உபகரணங்களை அன்றாட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு மின்சேமிப்பு சைக்கிளை தற்போது பொதுமக்கள் பரவலாக பாவிப்பதை அவதானிக்க முடிகின்றது.

சுமார் மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் குறித்த சைக்கிள் இலங்கை நாணய மதிப்பில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளதாக பாவனையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

8 மணித்தியாலங்கள் மின்சாரத்தின் உதவியுடன் சார்ஜ் செய்யப்படும் இச்சைக்கிள் மின்சார மின்கலத்தின் சக்தியுடன் விரைவாக பயணத்தை ஆரம்பிக்கின்றது.

எரிபொருள் இல்லாமல் இலகுவாக ஒரு மனிதன் இச்சைக்கிளை பயன்படுத்தி தத்தமது வேலைகளை விரைவாக பூர்த்திசெய்வதுடன், இரவில் பயணம் செய்வதற்குரிய சக்திவாய்ந்த மின்குமிழ் இச்சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் வீதியில் பயணிக்கின்றபோது எதிரே வருகின்ற வாகனங்களுக்கு சமிக்ஞை வழங்கக்கூடிய வசதியையும் இச்சைக்கிள் கொண்டுள்ளது.

ஒரே தடவையில் சுமார் 100 கிலோமீற்றர் தூரத்திற்கு சென்று இலக்கினை அடைந்து திரும்ப முடிவதுடன், இதில் அமர்ந்து செல்ல பிரத்தியேக தயாரிப்பு ஆசனம் பொருத்துவதற்குரிய ஏற்பாடும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பெற்றோல் இல்லாத இக்கால பகுதியில் பொதுமக்கள் இவ்வாறான சைக்கிள்களை தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகின்றனர்.

# மட்டி எடுக்கச்சென்ற பெண் மரணம்



(மீராவோடை நிருபர்)

ஆற்றில் மட்டி எடுத்துக்கொண்டிருந்த 60 வயதுடைய பெண்ணொருவர் நேற்று முன்தினம் (02) மதியம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மட்டி எடுத்துக் கொண்டிருக்கும்போதே இவர் மரணமடைந்துள்ளார்.

மட்டி எடுத்துக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக இவர் மரணமடைந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்த பெண் கிண்ணையடி சுங்கான்கேணி பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. வாழைச்சேனையில் ஹெரோயினுடன் இரு போதைப்பொருள் வியாபாரிகள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் இரு வெவ்வேறு சம்பவங்களில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை (01) இரவு 16 கிராம் 320 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு போதைப்பொருள் வியாபாரிகளை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய காவத்துமுனை பிரதேசத்தில் குறித்த வியாபாரியை சுற்றிவளைத்து கைதுசெய்ததுடன், இவரிடமிருந்து 5 கிராம் 320 மில்லி கிராம் ஹெரோயினை மீட்டதுடன், கைதுசெய்யப்பட்டவர், ஏற்கனவே போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வந்த நிலையில், நீதிமன்றில் ஆஜராகாமல் மறைந்துள்ளதையடுத்து இவருக்கு 6 நீதிமன்ற பிடியாணைகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய விசேட அதிரடிப்படையுடன் இணைந்து நேற்று வாழைச்சேனை 4ஆம் பிரிவிலுள்ள பகுதியில் வைத்து போதைப்பொருள் வியாபாரியை 11 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்விரு வெவ்வேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாட்டு பெண்களிடம் பாலியல் சேட்டை

## நிலாவெளியில் இளைஞரொருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலூர் பகுதியில் வெளிநாட்டு யுவதிகள் இருவரை பாலியல் சேட்டை செய்த குற்றச்சாட்டின்பேரில் இளைஞரொருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிலாவெளி, வேலூர் பகுதியிலுள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்த பிரான்ஸைச் சேர்ந்த 28 வயது மற்றும் 31 வயதுடைய யுவதிகள் இருவர் கடற்கரையோரமாக சென்று கொண்டிருந்தபோது உள்வீதியூடாக வந்த இளைஞர் இரு யுவதிகளையும் பாலியல் சேட்டை செய்ததாக நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சஹ்ரான் என்றழைக்கப்படும் இளைஞரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பாலியல் சேட்டை தொடர்பில் இரண்டு பிரான்ஸைச் சேர்ந்த யுவதிகளையும் சட்ட வைத்திய நிபுணர் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூதூரில் உள்ளூர் போக்குவரத்து பொறிமுறையை விருத்திசெய்வது தொடர்பில் கலந்துரையாடல்





(கந்தளாய் நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் எதிர்நோக்குகின்ற போக்குவரத்து பிரச்சினையை ஓரளவு சீர்செய்யும் நோக்கத்தில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்கின் தலைமையில் நேற்று (02) மாலை கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில், வலயக் கல்விப் பணிப்பாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், மூதூர் போக்குவரத்து சபையின் முகாமையாளர் மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து சேவையின் நேரக் காப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கைத்துறை முகத்துவாரத்திலிருந்து வருகின்ற பஸ்களை தோப்பூர் பிரதேசத்தின் ஊடாக வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை நேரத்திற்கு பஸ் சேவையினை ஏற்பாடு செய்தல், நோயாளர்களை பார்வையிடுவதற்காக வருகின்ற பொதுமக்களுக்கு பஸ் சேவையினை ஒழுங்குபடுத்தல், பஸ் நிறுத்துமிடத்தில் ஏற்படும் இடர்பாடுகளை போக்குவரத்து பொலிஸாரின் உதவியைகொண்டு சீர்செய்தல் போன்ற தீர்மானங்கள் இக்கலந்துரையாடலில் எட்டப்பட்டன.

# மாளிகைக்காட்டை ஊடறுத்து ஓடும் தோணாவினால் சுகாதாரச் சீர்கேடு

## துப்புரவு செய்யுமாறு கோரிக்கை







(மாளிகைக்காடு நிருபர்)

காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள காரைதீவு, மாளிகைக்காடு பிரதேசத்தை இடையறுத்து ஓடிக்கொண்டிருக்கும் தோணா குப்பைகள், விலங்குக் கழிவுகள் கொட்டப்பட்ட மற்றும் சல்பீனியாக்கள் நிறைந்த நீரோடையாக பல மாதங்களாக காட்சியளிக்கிறது. இதனால் கடுமையான சுகாதார சீர்கேடுகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்த நீரோடையை அண்டியதாக காரைதீவில் ஒரு வாசிகசாலையும், மாளிகைக்காட்டில் ஒரு வாசிகசாலையுமாக இரு வாசிகசாலைகள், பாலர் பாடசாலை, பொதுமக்கள் குடியிருப்புகள், 500 மாணவர்களுக்கு மேல் கல்வி பயிலும் பிரதேசத்தின் முக்கிய பாடசாலை, வங்கி என்பன அமைந்துள்ளன. இப்பிரதேசத்திலிருந்து அடிக்கடி துர்நாற்றம் வீசுவதாக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அது மாத்திரமன்றி குப்பைகள் மற்றும் சல்பினியாக்களினால் குறித்த நீர்நிலை அடைத்துக் காணப்படுவதனால் நீர் வடிந்தோட முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

முறையற்ற திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் காரணமாக நீர்நிலை ஓரங்களில் திண்மக்கழிவுகள், விலங்கு பாகங்கள் வீசப்பட்டு காணப்படுகின்றது. இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் அதிகரித்து காணப்படுவதுடன், நீர்நிலையை அண்டிய பிரதேசங்களில் கண்டல் தாவரங்களும் வளர்ந்துள்ளன. இந்த நீர்நிலை (தோணா) மற்றும் நீர்நிலை ஓரங்களை துப்பரவு செய்வதற்கான ஏற்பாடுகளை காரைதீவு பிரதேச சபை, பிரதேச செயலகம், நீர்ப்பாசன திணைக்களம் போன்ற சம்பந்தப்பட்டவர்கள் செய்ய உடனடியாக முன்வர வேண்டும் என அல்-மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா மற்றும் பொதுமக்கள் இணைந்து கோரிக்கை விடுக்கின்றனர்.

# குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை

**கொக்கட்டிச்சோலையில் சம்பவம்!**

(கல்லடி நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடுக்காமுனை பிரதேசத்தில் குடும்பஸ்தரொருவர் தனக்குத்தானே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை (02) மாலை நள்ளிரவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மயான வீதி, அருள்நேசபுரம், கடுக்காமுனை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கனகரெத்தினம் திருமாதவன் என்பவரே தனக்குத்தானே கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட நிலையில், சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நீண்டநாட்களாக கணவர் - மனைவிக்கிடையில் ஏற்பட்டுவந்த குடும்பத் தகராறு காரணத்தினால் தான் தற்கொலை செய்யப்போவதாக பல தடவைகள் கூறிவந்ததாகவும், சம்பவ தினத்தன்று மதுபோதையில் வீட்டுக்கு வந்தவர் மனைவியுடன் ஏற்பட்ட தகராறின் பின் வீட்டின் அறையில் தனக்குத்தானே தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும், குறித்த நபர் தான் கைபட எழுதிய கடிதம் ஒன்றினையும் வைத்துவிட்டு, தற்கொலை செய்துகொண்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் பிரேதத்தை கையளிக்கும்படி உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் வரிசையில் கைகலப்பு

**திருமலையில் ஒருவர் காயம்**

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை லிங்கநகர் ஐ.ஓ.சிக்கு சொந்தமான எரிபொருள் நிலையத்தில் இடம்பெற்ற மோதலில் இளைஞரொருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இம்மோதல் நேற்று முன்தினம் (02) காலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது திருகோணமலை, பாலையூற்று பகுதியைச் சேர்ந்த டி.டிலூபர் (23 வயது) என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட வரிசையில் நின்ற வேளையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதாகவும் இதனையடுத்து குறித்த இளைஞரை பொல்லால் தாக்கியதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த தாக்குதலினால் காயமுற்ற இளைஞர் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும், தாக்குதல் நடத்திய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் சந்தேகநபரை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதற்கு முயற்சித்த 54 பேர் கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினரால் கைது



(அப்துல்சலாம் யாசீம்)

கடல் வழியாக சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 54 பேரை ஏற்றிச்சென்ற உள்ளூர் பலநாள் மீன்பிடி இழுவைப் படகு கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினரால் நேற்று (03) மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளை ஒடுக்கும் நோக்கத்துடன், கடற்படையினர் தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்நிலையில், நேற்றுக் காலை (03) திருகோணமலை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, சந்தேகத்திற்கிடமான உள்ளூர் பல நாள் மீன்பிடி இழுவைப் படகொன்றை கிழக்கு கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இந்த மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் பிரதான சந்தேகநபர்கள் 06 பேர் உட்பட 41 ஆண்கள், 05 பெண்கள் மற்றும் 05 குழந்தைகள் என 54 பேர் அடங்குவதாக கடற்படையினர் தெரிவித்தனர். சந்தேகநபர்களுடன், இந்த சட்டவிரோத செயலுக்கு பயன்படுத்தப்பட்ட மீன்பிடிக் கப்பலும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 05 முதல் 56 வயதுக்குட்பட்டவர்களாவர். அவர்கள் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வேகமாகப் பணம் சம்பாதிப்பதற்காக கடத்தல்காரர்கள் அப்பாவிகளை ஏமாற்றி, பாதுகாப்பற்ற கப்பல்களைப் பயன்படுத்தி இதுபோன்ற நெறிமுறையற்ற நிறுவனங்களை ஏற்பாடு செய்கிறார்கள். எனவே, ஆபத்தான கடல் பயணங்களில் ஈடுபட்டு உயிரைப் பணயம் வைத்து சட்டத்தின் முன் பலியாவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கடற்படை பொதுமக்களை கேட்டுக்கொள்கிறது.

# மட்டக்களப்பில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 130 விவசாயிகளுக்கு தலா 25 லீற்றர் டீசல் வழங்கிவைப்பு



(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் டீசல் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விவசாயிகளின் தேவைகளை கருத்திற்கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் தேசபிரியவின் ஆலோசனைக்கமைய பெற்றோலியக் கூட்டுத்தாபன மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பரிசோதகர் ஏ.பி.எம்.பளீலின் மேற்பார்வையில் ஓட்டமாவடி தியாவட்டவான் பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை வாழைச்சேனை கமநல சேவைகள் பிரிவிலிலுள்ள 13 விவசாய கண்டங்களிலிருந்து தலா ஒரு விவசாய கண்டத்திலிருந்து 10 பேர் வீதம் 130 விவசாயிகளில் ஒருவருக்கு 25 லீற்றர் வீதம் டீசல் வழங்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவைகளுக்கென வைக்கப்பட்டிருந்த 3,307லீற்றர் டீசல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அறிவுரைக்கமைய விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

டீசல் விநியோகிக்கும் நிகழ்வில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார, வாழைச்சேனை கமநல சேவைகள் பிரிவின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பரிசோதகர் ஏ.பி.எம்.பளீல் ஆகியோர் கலந்துகொண்டு இந்த டீசல் விநியோகத்தை வழங்கினர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதுடன், இராணுவத்தினரால் விவசாயிகளுக்கு டீசல் பெறுவதற்கான பாஸ் வழங்கப்படுகின்றது.

# ஆலையடிவேம்பு சேனைக்கண்டம் கமக்காரர் பிரிவில் அறுவடை விழா

(ஆலையடிவேம்பு நிருபர்)



அக்கரைப்பற்று கிழக்கு கமநலசேவை திணைக்களத்தின் கீழ்வரும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சேனைக்கண்டம் தெற்கு கமக்காரர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அறுவடை விழா நேற்று முன்தினம் (02) இடம்பெற்றது.

சேனைக்கண்டம் தெற்கு கமக்காரர் அமைப்பின் தலைவர் எம்.ஐ.பகுர்தீன் தலைமையில் இடம்பெற்ற அறுவடை விழாவில் கமநலசேவை அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சாமிலி சோமதாச பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், விசேட அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நசார், அக்கரைப்பற்று கிழக்கு கமநலசேவை உத்தியோகத்தர் யூ.எல்.சம்சுதீன், சாகாமம் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வருகைதந்த அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன், தேசிய கீதம் இசைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இதன்பின்னர் சமய வழிபாடுகள் இடம்பெற்றபின் அறுவடை விழா சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றது.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 8500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அறுவடைக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுப்பதில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுவழிப்பாதை எதிர்வரும் 22ஆம் திகதி திறக்கப்பட்டு ஓகஸ்ட் 5இல் மூடத் தீர்மானம்





(ஆலையடிவேம்பு நிருபர்)

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுவழிப்பாதை இம்மாதம் 22ஆம் திகதி திறக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்படும் - என அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்தார்.

இதேநேரம் கதிர்காமம் மற்றும் உகந்தை முருகன் ஆலயங்களின் கொடியேற்றம் இம்மாதம் 29ஆம் திகதி இடம்பெறும் எனவும் கூறப்பட்டது.

கடந்த இரு வருடங்களாக கொரோனா தாக்கம் காரணமாக தடைப்பட்டிருந்த பாதயாத்திரை இவ்வருடம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், யாத்திரை தொடர்பாக உகந்தை முருகன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற அரச திணைக்களங்களின் தலைவர்கள் கலந்துகொண்ட உயர்மட்ட கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

லாகுல பிரதேச செயலாளர் என்.நவனீதராஜா தலைமையில் ஆலய வண்ணக்கர் எம்.டி.சுதுநிலமே பங்களிப்போடு இடம்பெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.எ.டக்ளஸ் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துருவான் அனுருத்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் உஷா பெரேரா மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகள் கடற்படை அதிகாரிகள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பாணமை விகாராதிபதி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சீதாராம குருக்கள் உதவிக்குரு சிவஸ்ரீ ஆ.கோபிநாத் சர்மா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சீதாராம குருக்கள் நடத்திவைத்தார். இதில் மாவட்ட அரச அதிபர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்பின்னர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்வேறு கருத்துகளும் முன்வைக்கப்பட்டடன் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டக்ளஸ் சிங்கள மொழியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததுடன், தமிழ்மொழியில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசனும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சீதாராமும் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர்.

கதிர்காம பாதயாத்திரைக்கான குமண ஊடான காட்டுவழிப்பாதை இம்மாதம் 22ஆம் திகதி காலை உகந்தை முருகன் ஆலயத்தில் இடம்பெறும் பூஜையை தொடர்ந்து 7 மணியளவில் திறக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்படும் எனவும் இக்காலத்தில் தினமும் காலை 6 மணிக்கு திறக்கப்படும் பாதை பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும் எனவும் குறிப்பிட்டனர்.

அதுபோல் பாதயாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு சுகாதார சேவைகள் குடிநீர் வசதி போன்றவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றனர். மேலும் பாதயாத்திரிகர்கள் சூழலை மாசுபடுத்தும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைகளை தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு மத்தியில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள உதவிகளை பாதயாத்திரிகர்கள் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதேநேரம் இம்முறை மேற்கொள்ளப்பட்ட அனைத்து தீர்மானங்களிலும் எரிபொருள் பிரச்சினை பாரிய தாக்கத்தினை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஏழைக் குடும்பமொன்றுக்கு வீடு அமைத்துக்கொடுத்து 45 வருடகால நட்பை வெளிப்படுத்திய பௌத்த, இந்து மதத் துறவிகள்

**ஆலையடிவேம்பில் நெகிழ்ச்சிச் சம்பவம்**



(ஆலையடிவேம்பு நிருபர்)

இந்து பௌத்த மதங்களின் துறவிகள் நண்பர்களாக இணைந்து 45 வருடங்களை தாண்டிய நிலையில், அவர்களது தெய்வீக நட்பை பிரதிபலிக்கும் வகையில் வருமானம் குறைந்த ஒரு குடும்பத்திற்கான வீடொன்றை அமைத்துக் கொடுத்து அதனை திறந்துவைத்த நெகிழ்ச்சிமிகு நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்றது.

இன நல்லிணக்கத்திற்குரிய சிறந்த முன்னுதாரணமான நிகழ்வில் 1975ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை சிறந்த நண்பர்களாக வாழ்ந்துவரும் ரிஷிகேச சுவாமிகள் ஸ்ரீமத் நித்தியானந்தா சரஸ்வதி மகராஜ் ஜி மற்றும் வணக்கத்திற்குரிய அத்தி பூஜ்ய உடுவன ரத்னபால நாயக்க தேரர் ஆகியோரது நட்பை வெளிப்படுத்தும் வகையிலேயே இந்நிகழ்வு நடைபெற்றது.

இன, மத, மொழி கடந்து ஒற்றுமையை உணரவைக்கும் இச்சிறப்பு நிகழ்வில் அன்பானந்தா மகராஜ் ஜி மற்றும் பௌத்த துறவிகள் கலந்துகொண்டு ஆசி வழங்கினர். நிகழ்வில் ஆலையடிவேம்பு முருகன் ஆலயத் தலைவர் ஆர்.ஜெகநாதன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்ற தலைவர் வே.சந்திரசேகரம் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

முன்னதாக வருகைதந்த துறவிகளை இந்துமத முறைப்படி வீட்டின் உரிமையாளர்கள் வரவேற்றனர். பின்னர் இந்து பௌத்த முறைகளின்படி இறைவழிபாடும் ஆசியுரையும் இடம்பெற்றன. இதன்பின்னர் வீட்டின் நினைவுப்பெயர்ப்பலகையை துறவிகள் இணைந்து திரைநீக்கம் செய்து வைத்ததுடன், நாடாவை வெட்டி வீட்டை திறந்துவைத்தனர். இறுதியாக சுவாமி அறையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளிலும் கலந்துகொண்டனர்.

குறித்த வீட்டை அமைப்பதற்கான நிதியை வணக்கத்திற்குரிய அத்தி பூஜ்ய உடுவன ரத்னபால நாயக்க தேரர் மற்றும் ரிஷிகேச சுவாமிகள் ஸ்ரீமத் நித்தியானந்தா சரஸ்வதி மகராஜ் ஜி வழங்கியிருந்தமை சிறப்பம்சமாகும்.

இன, ஐக்கியம் நல்லுறவு என நாம் பேசிக்கொண்டிருந்தாலும் அதற்கு உண்மையான செயல் வடிவம் கொடுத்திருக்கும் இரு துறவிகளும் இணைந்து அனைவருக்கும் முன்மாதிரியாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போடியார் புலம்பல்!



**கோட்டாவின் சாபத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என கொழும்பில எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையில் ஒரு போராட்டம் நடந்தது எலுவா?**

**கொழும்புல ஆர்ப்பாட்டம், காலிமுகத்திடலில தொடர் போராட்டம், எரிபொருள் நிலையங்களெல்லாம் போராட்டம் நடத்தினாலும் அந்த கழுதையும், குள்ள நரியும் அணுங்குபிடி பிடிச்சமாதிரி முகத்த தொங்கப்போட்டுகொண்டு இருக்ககுல எப்படி இது சாத்தியம்! பேசாம நாடாளுமன்றத்தில நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரவும் வழங்காத நீங்க எல்லாம் ஒரு தலைவர்.. சீ.. சீ..!**

# ரஷ்யப் படைகளின் ஓயாத தாக்குதல்: உக்ரைனில் மேலும் 18 பேர் பலி



ரஷ்யத் தலைநகர் கீவ்வில் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் உக்ரைனில் அடுக்குமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில், இரண்டு சிறுவர்கள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யா - உக்ரைன் போர் நான்கு மாதங்களைக் கடந்துள்ளது. கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்ற, ரஷ்யா தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், உக்ரைனின் ஒடேசா அருகே செர்ஹிவிக்கா பகுதியில் ஏவுகணைத் தாக்குதல்களை ரஷ்யா நடத்தியது. இதில், அடுக்குமாடிக் கட்டடம் இடிந்து விழுந்து, இரண்டு சிறுவர்கள் உட்பட 18 பேர் பலியாகினர், 30 பேர் படுகாயமடைந்தனர்.

ஒருசில பகுதிகளில் நல்லெண்ண அடிப்படையில் படைகளை திரும்பப் பெறுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. ஆனால், தன் எதிர்ப்புக் காரணமாகவே ரஷ்யா பின்வாங்கியதாக உக்ரைன் கூறியுள்ளது.

இதேவேளை, ரஷ்யப் படையினர் மீது உக்ரைன் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் மூவர் உயிரிழந்துள்ளனர். ரஷ்யப் படைகள் மீது 30இற்கும் மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக செபொரிஸியா நகரத்தின் முன்னாள் மேயர் ஐவன் பெடோராவ் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யாவின் பெல்கொரோட் நகரத்தின் மீது உக்ரைன் படையினர் நடத்திய தாக்குதலில் 11 தொடர்மாடிகளும் 39 தனி வீடுகளும் சேதமடைந்துள்ளன. எனினும், எத்தனைபேர் உயிரிழந்தனர் என்பது தொடர்பான விபரங்களை ரஷ்ய அரசாங்கம் வெளியிடவில்லை.

# கடற்கரைப் பூ

சுவீடன் நாட்டின் பிரபல நடிகையும் மொடல் அழகியுமான விக்டோரியா சில்வெஸ்டெட்டின் அண்மைய புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.

விக்டோரியாவுக்கு 48 வயதாகிறது. இந்த வயதிலும் கட்டழகை பேணுகிறாரே என அந்நாட்டு ஊடகங்கள் அவரைப் புகழ்ந்துள்ளன. மேலும், அவரை கடற்கரைப் பூ எனவும் வர்ணித்துள்ளன.

சுவீடனின் மிக அழகிய கடற்கரைகளில் ஒன்றான சென் ட்ரொபெஸில் விக்டோரியா நடந்துசெல்லும் புகைப்படங்களே இப்போது வைரலாகியுள்ளன.

விக்டோரியா சில்வெஸ்டெட் சுவீடன் நாட்டின் அழகியாக தெரிவுசெய்யப்பட்டு 1993ஆம் ஆண்டு உலக அழகிப் போட்டிக்கு உள்வாங்கப் பட்டமை குறிப்பிடத் தக்கது.



## உலக செய்திகள்

கொங்கோவில் அந்நாட்டு பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் முகமாக ஆண்டுதோறும் இடம்பெறும் வீதி நடனத்தின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.



# லிபிய நாடாளுமன்றத்துக்கு தீ வைத்த பொதுமக்கள்: பதற்றம் தொடர்கிறது



ஆபிரிக்க நாடான லிபியாவில் அரசுக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அதன் உச்சக்கட்டமாக அந்நாட்டு நாடாளுமன்றத்துக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

டாப்ராக் நகரிலுள்ள நாடாளுமன்றத்தை சூறையாடிய போராட்டக்காரர்கள் அதற்கு தீ வைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அரசுக்கு எதிராக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டம் நடத்துவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தலைநகர் ட்ரிப்போலி உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் பெருந்திரளான மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

அவ்வந்த நகரங்களிலுள்ள பல்வேறு அரச நிறுவனங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையிலேயே நாடாளுமன்றத்துக்கும் தீ வைக்கப்பட்டது. இதனால் அந்நாட்டில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுகிறது.

இதேவேளை, லிபிய நாடாளுமன்றத்துக்கு தீ வைத்தமையை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கண்டித்துள்ளன.

உக்ரைனில் ரஷ்யப் படைகளின் தாக்குதலில் அடுத்தடுத்து தனது மகன்மாரை பலிகொடுத்த ஹன்னா பெஸ்பெக்லோ என்ற 55 வயதுடைய தாய் மூத்த மகனின் சவப்பெட்டிக்கு அருகில் அழும் உருக்கமான காட்சி.



# தமிழ்நாட்டுக்கு அகதியாக சென்ற மூதாட்டி உயிரிழப்பு



தமிழகத்திற்கு அகதியாக சென்ற மன்னாரைச் சேர்ந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

இலங்கையிலிருந்து படகு மூலம் கடந்த மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்த நிலையில் மீட்கப்பட்டு ராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

சிகிச்சை பெற்றுவந்த பரமேஸ்வரி என்ற மூதாட்டி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (02) சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் முருங்கன்பிட்டி பகுதியைச் சேர்ந்த பரமேஸ்வரி மற்றும் சிவன் ஆகிய வயோதிப தம்பதிகள் இருவரும் கடந்த மாதம் 27ஆம் திகதி இலங்கையிலிருந்து படகு மூலம் தனுஷ்கோடிக்கு சென்றனர்.

இருவரும் மயக்க நிலையில் கடற்கரையில் மீட்கப்பட்ட நிலையில், ராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவ சிகிச்சையிலுள்ள இருவரை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜோன் டாம் வர்கீஸ் நேரில் சென்று பார்வையிட்டதோடு அவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

மேலும் இருவரின் உடல்நிலை மிக மோசமாக இருப்பதால் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைத்தார்.

இந்நிலையில், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த வயோதிப தம்பதிகளில் பரமேஸ்வரி என்ற மூதாட்டி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

லண்டனில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆதரவாக இடம்பெற்ற பேரணியின்போது ஆண்கள் முத்தமிட்டுக்கொண்ட காட்சி.



# அவுஸ்திரேலிய கடலில் புதிய வகை நண்டுகள்

அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரையில் புதிய வகை நண்டு இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஏனைய கடல்வாழ் உயிரினங்களிலிருந்து வேறுபட்டதாக உடல்களில் உரோமம் வளர்ந்ததாக அந்த நண்டுகள் காணப்படுகின்றன.

அச்சுறுத்தும் தோற்றத்துடன் அவை காணப்படுகின்றபோதிலும் மெல்லிய உரோமமே உடலில் வளர்ந்துள்ளது. அந்த உரோமத்தின் ஊடாக எதிரி விலங்குகளிடமிருந்து தம்மை காப்பாற்றிக்கொள்கின்றன.

கடற்கரையில் ஒதுங்கிய ஓர் உயிரினம் தொடர்பில் தகவல் அளிக்கப்பட்டதாகவும் அதன் பின்னரே ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் மேற்கு அவுஸ்திரேலிய நூதனசாலையின் பொறுப்பாளர் என்ட்ரூவ் ஹொய்ஸ் தெரிவித்துள்ளார்.





# ஆணவன் யார்?

எப்படியும் வாழலாம் என்ற கட்டமைப்புக்குள் மூழ்கித் திளைக்காது, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரம்புகளோடு வாழ்வை நகர்த்திச் செல்லும் நாம், நம்மைச் சூழ நடப்பவற்றை அவதானித்தலும் அவசியமே! பல பாலினங்களால் கட்டமைக்கப்பட்டதுவே நம் சமூகம். ஆண், பெண் என்ற அடிப்படையில் பிறந்திட்டாலும், உள்ளூர உணருதலில் மாற்றங்கள் உண்டாக, திருநங்கையாய் திருநம்பியாய் என நடந்திடும் மாறுதல்களும் அளப்பரியன.

ஒவ்வொருவரும் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்டுள்ளோம் என்பது எந்தளவிற்கு மறுக்க முடியாததோ, அதே அளவு மறுக்க முடியாத மற்றொரு உண்மையொன்றும் உள்ளது. ஆண் என்பவன் இப்படித்தானென சமூகம் பல வரையறைகளை விதித்துள்ளது. உண்மையில் ஆண் என்றால் அப்படித்தானா? என்று அறியவேண்டிய ஆவலின் நிமித்தம் பல அலசல்களுக்குப் பிறகு, சில யதார்த்த உண்மைகள் என் பேனா மை வழியாக உங்களிடத்தே!

ஆண் என்பவன் கம்பீரமானவன், அஞ்சாதவன், குடும்பத்தைத் தாங்குபவன், வீரமானவன், குறிப்பாக அழாதவன் என அவர்களுக்கு வெளியில் கொடுக்கும் விம்பங்கள் பல!

இப்படியெல்லாம் இருந்தால்தான் அவன் ஆணா என்கின்றபோது, ஆண்களே இதை மறுக்கத்தான் செய்கின்றார்கள்.

"ஆண் என்றால் யாரென எனக்குக் கூறத் தெரியவில்லை, ஆனால், ஆண் என்றால் இப்படித்தானென ஒரு கட்டமைப்புக்குள் நான் என்னை நிலைநிறுத்திப் பார்க்க முடிவதில்லை, இருப்பினும், ஆண் என்பவனுக்கு ஆண்களிடம் உள்ளதைவிட பெண்களிடமுள்ள உருவமைப்புகளே அவனை பெண்களை விட பலமானவனாகக் கட்டமைத்து வைத்துள்ளது. அந்தக் கட்டமைப்புக்குள்ளேயே அவர்கள் சுதந்திரமாக வாழப் பழகிவிட்டனர்.

தொடர்ந்தும் வாழ விரும்புவார்கள். இருப்பினும், ஆண் என்பவன் பலவீனமானவன். தன் உணர்ச்சிகளை முறையே வெளிக்காட்ட இயலாதவன், போலியான விம்பத்தினுள் சுதந்திரமாக வாழப் பழகிவிட்டான்." ஈழத்துத் திரைப்படத்துறை இயக்குநர் சசிகரன் யோவின் வார்த்தைகள் இவை.

உண்மையில் பெண்கள் ஆண்களை நோக்கும் கோணம் வேறு, ஆண்கள் தம்மை வெளிக்காட்ட விரும்பும் கோணம் வேறொன்றே. அதற்கான வெளி இன்னமும் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை என்பது சாபமே.

"வெளியில் வீரன்போல் காட்டிக் கொள்வதை விட, பெண்களை மதித்து, குடும்பத்தை நன்றாகக் கவனித்து, என் உணர்வுகளை அப்படியே வெளிக்காட்டி வாழ்வதையே நான் ஆண்மை என்பேன்" சகோதரன் ஒருவரின் உள்ளக்கிடக்கை இது.

'வரதட்தணை' என்பது பெண்கள் மேல் திணிக்கப்படும் சுமையென வெளியே சொன்னாலுமே, அதன் பொறுப்பு சார்ந்திருப்பதென்பது பெருமளவில் குடும்பத்திலுள்ள அப்பாவையோ, அண்ணனையோ, இல்லை குடும்பத்தை நடத்தும் ஓர் ஆணிலேயேதான்.

"எனக்கு 55 வயசு, மூண்டு பொம்பிள சகோதரம், கட்டாரில 20 வருஷம் நிண்டு உழைச்சு சீதனம் குடுத்திட்டு, இப்ப ஒரு வருஷத்துக்கு முதல்தான் கலியாணம் செய்தனான். ஆனா நான் சீதனம் வாங்காமதான் செய்தனான்" அந்த அழுத்தமான வார்த்தையிலிருந்த வலியை என்னால் உணர முடிந்தது.

பெண்ணியம் பேசும் பலர் ஏன் ஆணியம் பற்றிப் பேச மட்டும் குரலற்றவராயிருக்கிறோம்?

வெளிச்சொல்ல முடியாத ஏராளம் எண்ணக்கிடக்கைகளுடன், உள்ளேயே வெதும்பும் அவர்களது வேதனைகள் வார்த்தைகளில் வடிக்கப்பட இயலாதவை. பாலியல் சுரண்டல் எனும் வார்த்தை நம்மில் பலர் அறிந்தது. ஆனால், இவை ஆண்களுக்கும் உண்டென்பது எத்தனை பேர் அறிந்தது?

"என்னால பஸ்ல வரவே ஏலாமக் கிடக்கு, அதுவும் காலையில 8 மணி பஸ் சரியான மோசம். சனநெரிசல்தான் காரணமோ'' என நண்பனிடத்தே வினவியபோதுதான் தெளிவாக விடயத்தைச் சொன்னான். பெண்கள் எவ்விதம் பஸ்களில் சேஷ்டைகளைச் சந்திக்கின்றார்களோ அது போலவே ஆண்களும் அவதிப்படுகிறார்கள். ஆனால், இவை வெளித்தெரிவதில்லை.

"வெளிய சொல்லிடாத மானம் போயிடும், ஆம்பிளதானே நீ. உனக்கு சமாளிக்க ஏலாதா எண்டு வெளில கலாய்ப்பாங்கள்.''

ஆக, ஆண் என்றால் அவன் தன் உணர்வை மறைமுகமாகத்தான் வைத்து அடைகாக்க வேண்டுமா?

மனதிலுள்ள வலிகளைக் குறைத்துக் கொள்ள இலகுவான முறை "மனம் விட்டு அழுவது". ஆனால், அழுகை கூட இவர்களுக்கு முட்டுக்கட்டைதான்.

"என்னடா பொம்பிள மாதிரி அழுற?" என மற்றையவர் கிண்டல் செய்து விடுவார்களென ஆண்கள் பொது வெளியில் அழுவதை விரும்புவதில்லையென பலர் கூறுவதைக் கேட்க முடிந்தது. ஆனால், ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என்னவெனின், உணர்வுகளை மதிக்கத் தெரிந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் பொது வெளியில் ஆண்கள் அழுவதை எள்ளலுடன் நோக்க மாட்டார்களென்பதே!

ஆண்கள் மென்மையாயிருந்தால் அவர்களுக்கு தனியான பெயரொன்றைப் புனைந்து கேலி செய்வதை பல முறை பார்த்திருக்கின்றேன். மென்மை என்பது பெண்களுக்காக எழுதப்பட்ட சாசனமென அவர்கள் நோக்குவதே இதற்கான காரணம். ஒருவனது வெளித்தோற்றம்தான் அவனது ஆண்மையைப் பிரதிபலிக்கும் என்பது மூடச் சிந்தனையெனத் தெரிவது எப்போது?



எவ்வளவு தூரம் மற்றவர்களுக்காகத் தன்னைக் கம்பீரமாகக் காட்டிக் கொள்கின்றார்கனோ, மகனாய், சகோதரனாய், கணவனாய், தந்தையாய் குடும்பத்தைக் கவனித்துக்கொள்கின்றானோ, அதனைக் கடந்தும் அவன் தன்னுள் இருக்கும் வலிகளை வெளிக்கொணர முடியாமல், சமூகத் தடைப்பாடுகளினால் கட்டுண்டு கிடப்பது உண்மையில் இன்னமும் சாபமே!

கட்டற்ற சுதந்திரமெனக் கூறிக்கொண்டு இயல்பான உணர்வுகளைக் கூட வெளிப்படுத்த முடியாமற் போகையில் எங்கே தானோ ஆடவனின் சுதந்திரம்?

**சுதர்சினி முத்துலிங்கம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## பிரதமர் பதவியை ரணில்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சார்பில் பிரதமர் ஒருவரை பிரேரிக்கும் கூட்டம் அது.

டலஸ் அழகப்பெருமவை பிரேரிப்போம் என்கிறார் வாசுதேவ.

இல்லை. ஜனாதிபதியே ஒருவரை நியமிக்கட்டும் என்கிறார் நிமல் லான்ஸா .

இப்பதவிக்கு 3 பெயர்கள் வந்துள்ளன என்கிறார் மைத்ரி.

நிமால் சிறிபால டி சில்வா, டலஸ் அழகப்பெரும, விஜேதாச ராஜபக்ஷ ஆகிய மூவருமே அது.

ஆனால், தனக்கே அப்பதவி வேண்டும் என்கிறார் நிமால்.

பல அமைச்சுகளை வகித்தவன். எதிர்கட்சித் தலைவராக இருந்தவன். நீண்ட அரசியல் அனுபவம்கொண்டவன்.

இப்படி அவிழ்த்துவிடுகிறார் கண்டபடி.

ஏனையவர்களின் பெயர்களை பிரேரித்ததையும் எதிர்க்கிறார்.

அதற்காக அவர் வெளிநடப்பும் செய்ய முற்படுகிறார். ஒருவாறு சமாளிக்கிறார்கள் அவரை.

அங்கு பலரும் பல்வேறு கருத்துகள்.

இறுதியில் அந்த மூவரின் பெயர்கள் பிரேரிப்பு.

***பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள்: சஜித்திடம் ஜனாதிபதி கோரிக்கை***

ஒரு பக்கம் கட்சிகள் கூட்டம் போட்டு பிரதமர் பதவியைக் குறிவைக்க, மறுபுறம் ஜனாதிபதி, பிரதமர் பதவிக்கு பொருத்தமான ஒருவரைத் தேட கொதிகொள்கிறது அரசியல் களம்.

ஜனாதிபதி முதலில் தொடர்புகொள்கிறார் சஜித்தை.

பிரதமர் பதவியை ஏற்குமாறு கூறுகிறார்.

மறுக்கிறார் சஜித்.

காலிமுகத்திடல் மக்களின் போராட்ட நிலைப்பாட்டுடன் இருக்கிறேன். எதுவென்றாலும் கட்சியுடன் பேசித்தான் முடிவெடுப்பேன்.

இதுதான் சஜித்தின் பதில்.

இந்த அழைப்பையடுத்து கட்சியின் கூட்டத்தைக் கூட்டுகிறார் சஜித்.

ஜனாதிபதி பேசிய விடயத்தைக் கூறுகிறார். எம்.பிக்களின் கருத்தைக் கேட்கிறார்.

நாம் மக்களின் பக்கத்தில் நிற்க வேண்டும் என்கிறார்கள் எம்.பிக்கள்.

உடன்படுகிறார் அதற்கு.

மகாநாயக்க தேரர்களும் சஜித்துடன் தொலைபேசியில் உரையாடல்.

பிரதமர் பதவியை பாரமேற்கக் கூறுகிறார்கள்.

போராட்டத்தை காட்டிக்கொடுக்க முடியாது என்றார் சஜித்.

பேராயரும் பேசுகிறார். நிபந்தனைகள் இல்லாமல் பதவியேற்று ராஜபக்ஷக்களை காப்பாற்ற வேண்டாம் என்கிறார்.

***பெரும்பான்மை கையில்: தலையசைத்த ரணில்***

சஜித் மறுத்ததும், ரணிலின் பக்கம் திரும்புகிறது ஜனாதிபதியின் கவனம்.

எடுக்கிறார் தொலைபேசி அழைப்பை. அழைக்கிறார் ஜனாதிபதி மாளிகைக்கு.

இதைத்தான் எதிர்பார்த்திருந்தார் ரணில். விரைகிறார் உடனே.

நீண்ட நேர பேச்சு. இருவருக்குமிடையில்.

பிரதமர் பதவியை ஏற்குமாறு கூறுகிறார்.

ஏற்றுக்கொள்கிறார் உடனே.

அப்போதே அவரின் கையில் நாடாளுமன்ற பெரும்பான்மை.

பதவியை ஏற்ற பின் பெரும்பான்மையை தேடி அவர் ஓடவில்லை. பதவியை ஏற்கும் முன்பே பெரும்பான்மையை சேர்த்துவிட்டார்.

அவர் பிரதமராவர் என்பதில் அவ்வளவு உறுதி அவருக்கு.

ரணிலும் விதிக்கிறார் நிபந்தனைகளை.

ஆனால், அது சஜித்தின் நிபந்தனைபோல் சிக்கலான நிபந்தனை அல்ல ஜனாதிபதிக்கு.

கோடா கோ கம போராட்டக்காரர்களை அகற்றக்கூடாது. 19ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

இதுதான் அந்த நிபந்தனை.

சிக்கலான நிபந்தனை அல்ல. சம்மதிக்கிறார் ஜனாதிபதி.

அப்படியானால், இதை உடனே நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அப்படியே செய்கிறார். தொலைக்காட்சி ஊடாக...

சந்திப்பு முடிந்து ரணில் நேராக செல்கிறார் வஜிர அபயவர்தனவின் வீட்டுக்கு.

அங்கேயும் பலர் - பல சந்திப்புகள்.

அதில் முக்கியமானது எது தெரியுமா?

சஜித் அணியின் சிலர் சந்தித்ததுதான்.

ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ஹெக்டர் அப்புஹாமி உள்ளிட்ட 12 பேர் அங்கே.

அவர்களுடன் பேச்சு ஆரம்பம்.

நாளை மாலை 6.30இற்கு பிரதமராகிறேன் என்றார்.

மகிழ்ச்சி. எங்கள் ஆதரவு உங்களுக்கே.

உறுதியளிக்கிறார்கள்.

அடுத்து மீண்டும் சரிபார்க்கிறார் 113 பெரும்பான்மையை. கட்சி முக்கியஸ்தர்களுடன் சேர்ந்து..

எல்லாம் சரி. பெரும்பான்மை சரி.

நாளை அச்சமின்றி பதவியேற்கலாம்...

***மறுபேச்சே இல்லை: ஏகோபித்த ஆதரவு***

பிரதமர் தெரிவு முடிந்துவிட்டது. இனி யாருக்கும் இடமில்லை. கதவை மூடுகிறார் ஜனாதிபதி.

மறுநாள் வியாழக்கிழமை.

முன்னாள் அமைச்சர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு.

உடனடியாக பிரதமர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவர்களின் கருத்துகளை கேட்கிறார் ஜனாதிபதி.

இரண்டு பெயர்கள் பிரேரிக்கப்படுகின்றன. ஒருவர் சரத் பொன்சேகா, மற்றயவர் ரணில்.

ரணில் சர்வதேச தொடர்புகளைக்கொண்டவர் - அனுபவசாலி. அவரை நியமிப்பது பொருத்தமானது என்று அவர்கள் கூறுகின்றனர்.

சரத் பொன்சேகாவுக்கு சர்வதேச மட்டத்தில் பிரச்சினை. அவரை நியமித்தால் சர்வதேச உதவிகள் கிடைக்காது என்கிறார்கள்.

பொன்சேகாவின் பெயரை பிரேரித்தவர்களும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இறுதியில் தனது முடிவை அறிவிக்கிறார் ஜனாதிபதி.

ரணிலை பிரதமராக்குவதற்கு தான் தீர்மானித்துள்ளதாகக் கூறுகிறார்.

மறுபேச்சே இல்லை

அனைவரும் இணக்கம். ஏகோபித்த குரலில் ஆதரவு.

சரியான முடிவு என்கிறார் ஜீ.எல்.பீரிஸ். இதற்கு தங்களின் முழுமையான ஆதரவு என்கிறார்கள் அனைவரும்.

உடனே அவர்களுக்கும் ரணிலுக்கும் இடையில் சந்திப்பு.

ஏற்பாடு செய்கிறார் ஜனாதிபதி.

தொலைபேசி அழைப்பை எடுக்கிறார் ஜனாதிபதி. விடயத்தை சொல்கிறார் ரணிலிடம். விரைந்து வருகிறார் அவர் அங்கு.

மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார் ஜீ.எல்.பீரிஸ். விரிவான சந்திப்பு. ரணிலுக்கு முழுமையான ஆதரவு. உறுதி வழங்குகிறார்கள் அனைவரும்.

மகிழ்ச்சியாக கலைகிறது அந்தச் சந்திப்பு.

***சஜித்தின் இறுதி நேர முயற்சி:***

பட் ரூ லேட்..

பரவுகிறது தகவல். ரணில் பிரதமராகப் போகும் செய்தி.

ரணில் பிரதமராகப் போகிறார் என்றதும் பெரும் அதிர்ச்சி சஜித்துக்கு. இப்போது ஆசை வருகிறது அப்பதவிமீது.

ரணிலை முந்த வேண்டும். தான் கைப்பற்ற வேண்டும்.

கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகிறார் சஜித்.

நான் பிரதமர் பதவியை பாரமேற்கத் தயார் என்கிறார்.

நிபந்தனைகளின்றி பாரமேற்பதை எதிர்க்கிறார்கள் எம்.பிக்கள்.

அதற்கு உடன்படுகிறார் சஜித். தயாராகிறது கடிதம் ஜனாதிபதிக்கு.

ராஜித சேனாரத்ன, எரான் விக்ரமரத்ன, கபீர் ஹாசீம், சஜித்தின் செயலாளர் ரவி ஜயவர்தன, ரஞ்சித் மதுமபண்டார. இவர்கள் இணைந்தே தயாரிக்கிறார்கள்.

நேரம் நெருங்குகிறது. அவசரமாக ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் ரணில் பிரதமராவதைத் தடுக்க முடியும்.

கொழும்பில் எங்கும் போராட்டம். அதனால், வீதித் தடைகள், நெருசல்கள்.

ஜனாதிபதி செயலகத்தை விரைவாக அடைவது கஷ்டம்.

ஓர் ஐடியா தோன்றுகிறது மனுஷ நாணயக்காரவுக்கு...

மோட்டார்சைக்கிளில் செல்வோம்.

மனுஷவும் ஹரீன் பெர்னாண்டோவும் மோட்டார்சைக்கிளில் செல்வதற்குத் தயாராகிறார்கள். கடிதத்தை எடுத்துக்கொண்டு...

நாடு இருக்கும் நிலைமையில் அது பாதுகாப்பானதல்ல. மக்கள் இவர்களை அடையாளம் கண்டால் தாக்குவதற்கும் வாய்ப்புண்டு.

அதனால் கைவிடப்படுகிறது அந்த முயற்சி.

சஜித்தின் செயலாளர் ரவி ஜயவர்தன, எஸ்.எம்.மரைக்கார் இருவரும் செல்கிறார்கள் கடித்தை எடுத்துக்கொண்டு.

கடிதம் போய் ஜனாதிபதியிடம் சேரும் முன்பே சஜித்திடமிருந்து தொலைபேசி அழைப்பு ஜனாதிபதிக்கு.

கடிதம் வந்துகொண்டிருக்கிறது. நான் பிரதமர் பதவியை ஏற்கத் தயார்.

அதற்கு ஜனாதிபதியின் பதில் too late.

நான்தான் உங்களிடம் முதலில் பாரமெடுக்க சொன்னேன். நீங்கள் நிபந்தனை விதித்து மறுத்துவிட்டீர்கள்.

ரணில் விக்ரமசிங்க பெரும்பான்மை இருப்பதாக சொல்கிறார். அவருக்கு பதவியை கொடுப்பதற்கு வாக்குறுதி வாங்கிவிட்டேன். நீங்கள்.too late.

முடிந்தால் நாடாளுமன்றில் பெரும்பான்மையை காட்டுங்கள். நான் ஏதாவது செய்கிறேன் என்கிறார்..

பலத்த ஏமாற்றம் சஜித்துக்கு...

இப்போது கடிதம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தின் கையில் அது.

அடுத்த தொலைபேசி அழைப்பு.

ஹர்ஷ டி சில்வாவிடமிருந்து காமினி செனரத்திற்கு.

சஜித் ஜனாதிபதியுடன் பேசியது தெரியாது ஹர்ஷவுக்கு.

கடிதம் கிடைத்துவிட்டதா? வினவுகிறார்.

ஆம்...இருந்தாலும் பயனில்லை..

ஏன் என்று வினவுகிறார் அதிர்ச்சியுடன்.

உங்கள் தலைவர் மறுத்துவிட்டார். அதனால் வேறு ஒருவருக்குக் கொடுப்பதற்கு வாக்குறுதி வழங்கிவிட்டோம் என்கிறார் காமினி.

அவ்வளவுதான்...

சஜித்துக்கு பதில் கடிதம் அனுப்புகிறார் ஜனாதிபதி. அன்றைய தினமே.

தொலைபேசியில் கூறிய விடயம்தான் அதில்...

கடும் கோபம் சஜித்துக்கு. பிரதமர் பதவியை வழங்குவதற்கு அப்படி என்ன அவசரம். இவர்கள் நாட்டை மேலும் சீரழிக்கப் போகிறார்கள்

திட்டித் தீர்க்கிறார் ஜனாதிபதியை.....

***பதவியேற்கும் நேரத்தில்...***

முன்னாள் அமைச்சர்களை சந்தித்துவிட்டு அவர்களின் ஆதரவைப் பெற்றுவிட்டு வீடு திரும்புகிறார் ரணில்.

சற்று நேரத்தில் ஆடை மாற்றிக்கொண்டு மீண்டும் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்ல வேண்டும்.

எதற்காக...?

பிரதமர் பதவியை ஏற்பதற்காக.

மாலை 6.30 மணிக்கு பதவியேற்பு.

சற்றுநேரத்துக்கு முன் ஓர் ஊடகவியலாளர் சந்திப்பு.

ஓமல்பே சோபித தேரர் மற்றும் பேராயர் மெல்கம் ரஞ்ஜித் ஆகியோர் நடத்தி இருந்தார்கள்.

ரணில் பிரதமராவதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அது.

அப்போது வெளியாகி இருந்தது அந்தச் செய்தி...

இதனால் இன்று பதவியேற்க வேண்டாம். தள்ளிப்போடுங்கள் என்று சிலர் ஆலோசனை.

அதைக் கணக்கில் எடுக்கவில்லை ரணில்.

திட்டமிட்டபடி, இன்றே பதவியேற்பு என்கிறார்.

ருவான், சாகல, வஜ்ஜிர ஆகியோரும் ரணிலின் நிலைப்பாட்டில்.

சோபித தேரரிடமிருந்து ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்பு. ஊடகவியலாளர் சந்திப்புக்கு முன் ஜனாதிபதி பேசவில்லை. அங்கிருந்த அதிகாரி ஒருவரே பதிலளிக்கிறார்.

நாங்கள் இங்கு ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தப் போகிறோம். ரணிலை பிரதமராக நியமிப்பதற்கு நாங்கள் எதிர்ப்பு.

ஜனாதிபதியுடன் பேச வேண்டும்.

அழைப்பை அவரிடம் கொடுங்கள் என்கிறார் தேரர்.

ஜனாதிபதி லைனுக்கு வரவில்லை.

அந்தப் பக்கம் தயாராகிக்கொண்டு இருக்கிறார் ரணில்.

அப்போது அவருக்கும் தொலைபேசி அழைப்பு.

வேறு மூவரிடமிருந்து...

அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் பீடாதிபதிகளான மகாநாயக்க தேரர்களிடம் இருந்தும், கண்டி மறைமாவட்ட ஆயரிடம் இருந்தும்.

ரணிலுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் அழைப்புகள் அவை.

வாழ்த்தி அனுப்புகிறார்கள் ரணிலை. ரணில்மீது நம்பிக்கை வைத்து.

இப்போது நேரம் சரி. ஜனாதிபதி மாளிகையை அடைகிறார் ரணில்.

அங்கு சென்றதும் அவரிடம் அதைச் சொல்கிறார் ஜனாதிபதி.

சோபித தேரர் தொலைபேசி அழைப்பு எடுத்த செய்தியை. அவர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்ற செய்தியை...

அது பரவாயில்லை. கத்தோலிக்க சபையின் ஆதரவு எனக்கு உண்டு என்று கூறுகிறார் ரணில்.

பதவியை ஏற்கிறார். எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகிறார்.

தனி ஒருவனாக வந்து பிரதமர் பதவியை தட்டிச் செல்லும் அவரது மூளையைப் பார்த்து நாடே வியந்து நிற்கிறது இப்போது.

***கோட்டாவுக்கு எப்படியும் ஆப்புத்தான்***

ரணில் அல்ல.பிரதமர் பதவியை ஏற்கும் யாராக இருந்தாலும் சரி. அவர் இந்தப் பொருளாதார பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைத்தால் அவ்வளவுதான்.

அவருக்குப் பின்னால்தான் நிற்பார்கள் நாட்டு மக்கள். இனி இனவாதத்தை வைத்தெல்லாம் அரசியல் செய்ய முடியாது.

சரியான பொருளாதார கொள்கையை வைத்திருப்பவருக்கு மாத்திரமே மக்கள் ஆதரவு.

அந்தவகையில், ரணில் தற்போதைய பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டால், நாட்டை நிமிர்த்தி எடுத்தால் கோட்டாவின் கதை சரி.

அடுத்த தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்தை முற்றாகத் துடைத்தெறிந்துவார்கள் மக்கள்.

அது ஜனாதிபதிக்குத் தெரியாமல் இல்லை.

அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பதைவிட... இப்போது இருக்கின்ற மீதிக் காலத்தைக் கடப்பதுதான் அவருக்கு முக்கியம்.

செய்யக்கூடிய எவரை வைத்தாவது நிலைமையை சரி செய்தல்.

அதனால் உண்டாகும் நிழலில் மீதிக் காலத்தைக் கடத்துதல்.

இல்லாவிட்டால்,நிலைமை மேலும் மோசமடையும். கடாபிக்கு ஏற்பட்ட நிலைமைதான் ஜனாதிபதிக்கும்.

அதை அறிந்துதான் ஜனாதிபதி ரணிலிடம் ஒப்படைத்திருக்கிறார் பிரதமர் பதவியை.

ரணில் நிலைமையை சரி செய்தாலும் செய்யாவிட்டாலும் கோட்டாவுக்கு ஆப்பு ஆப்புதான்...

பொறுத்திருந்து பாருங்கள் ரணிலின் ஆட்டத்தை...



# பொதுநலவாய விளையாட்டு விழாவுக்காக இலங்கையிலிருந்து 114 வீர, வீராங்கனைகள் பங்கேற்பு

**முதல் தடவையாக வீராங்கனைகளின் எண்ணிக்கை அதிகம்**

2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழா இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் ஜூலை 28ஆம் திகதிமுதல் ஒகஸ்ட் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில், இலங்கை சார்பில் 15 வகையான போட்டி நிகழ்ச்சிகளுக்காக 114 வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். இதில் 54 வீரர்களும், 60 வீராங்கனைகளும் உள்ளடங்குகின்றனர்.

மேலும், ஒவ்வொரு விளையாட்டுச் சங்கத்தினாலும் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சியாளர்கள், முகாமையாளர் என 35 பேர் அடங்கிய அதிகாரிகள் குழு மற்றும் 16 உதவியாளர்களும் என மொத்தம் 165 பேர் கொண்ட குழு இந்த ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளவுள்ளனர்.

2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ள முதலாவது இலங்கை அணி ஜூலை 25ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. அதற்கு முன்னதாக மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஜூலை 21ஆம் திகதி பேர்மிங்ஹாமை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு விழாவில் பங்கேற்கவுள்ள இலங்கை வீரர்களுக்கு 3 பிரிவுகளின் விமான டிக்கெட் வழங்கப்படவுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சு 20 பேருக்கும், விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் 20 பேருக் கும் பொதுநல வாய விளையாட்டுத்துறைச் சங்கம் 99 பேருக்கும் விமான டிக்கெட்டுகளை வழங்கவுள்ளன. இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் அனைத்து செலவுகளையும் இலங்கை கிரிக்கெட் சபை ஏற்கவுள்ளது.

இதேவேளை, இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் முதல் தடவையாக இலங்கை அணியில் வீரர்களின் எண்ணிக்கையை விட வீராங்கனைகளின் எண்ணிக்கை அதிகமாக அமைகிறது.

## இலங்கையுடனான இரண்டாவது டெஸ்ட்டை தவறவிடும் எகார்



சுற்றுலா அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரிலிருந்து அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்துவீச்சாளர் அஸ்டன் எகார் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது மூவகையான கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரை ஆஸி. அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்ற, அடுத்து நடைபெற்ற 5 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை இலங்கை அணி 3-2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இவ்வாறான நிலையில், இறுதித் தொடரான இரு போட்டிகள்கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. இந்நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் நிலையில், உபாதை காரணமாக அஸ்டன் எகார் விலகியுள்ளார். இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியின்போது எகார் உபாதைக்கு முகங்கொடுத்திருந்தார்.

இவருடைய இடுப்பு பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஒருநாள் தொடர் முழுவதும் விளையாடவில்லை. தொடர்ந்து இவருடைய உபாதை குணமடையாத நிலையில், முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில் உபாதை முழுமையாக குணமடையாத காரணத்தால் அவர் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாடமாட்டார் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

**விளையாட்டு செய்திகள்**
thamilansports@gmail.com

## ஒரே ஓவரில் இருவித சாதனைகள்

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே ஓவரில் அதிக ஓட்டங்கள் கொடுத்த பந்துவீச்சாளர் என்ற மிக மோசமான சாதனையை இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட் படைத்துள்ள அதேவேளை, ஒரே ஓவரில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சாதனையை ஜஸ்பிரிட் பும்ரா படைத்தார்.

சுற்றுலா இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி தற்சமயம் நடைபெற்று வருகிறது. முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 416 ஓட்டங்களை குவித்தது. இதில் இந்திய அணியின் தலைவர் ஜஸ்பிரிட் பும்ரா எதிர்கொண்ட ஒரு ஓவரை இங்கிலாந்து அணியின் ஸ்டூவர்ட் பிராட் வீசினார். அவர் அந்த ஓவரில் 35 ஓட்டங்கள் கொடுத்தார். இதனால் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே ஓவரில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சாதனையை பும்ரா படைத்தார். மேலும் அதிக ஓட்டங்கள் கொடுத்த பந்துவீச்சாளரென மோசமான சாதனையை பிராட் படைத்தார்.

மேலும், இந்த ஓவரில் வைட், நோ போல் போன்ற எஸ்க்ஸ்டரா ஓட்டங்கள் தவிர்த்து பும்ரா இந்த ஓவரில் 29 ஓட்டங்கள் அடித்தார்.






கடந்த 2003ஆம் ஆண்டு, ஒரே ஓவரில் 28 ஓட்டங்கள் விளாசினார் பிரைன் லாரா. அந்த சாதனையை அவுஸ்திரேலிய அணியின் ஜோர்ஜ் பெய்லி 2013 ஆம் ஆண்டு, தென்னாபிரிக்கா அணியின் கேசவ் மகாராஜ் 2020ஆம் ஆண்டு சமன் செய்தார்களே தவிர, யாரும் முறியடிக்கவில்லை. இந்நிலையில், பும்ரா இந்தச் சாதனையை முறியடித்தார்.

## வெறும் 40 ரூபாவில் மருத்துவ சிகிச்சை பெறும் டோனி



கிரிக்கெட் உலகில் மிகவும் செல்வந்தர்களில் ஒருவரான இந்திய அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.டோனி உள்ளூர் ஆயுர்வேத மருத்துவரிடம் ரூ. 40 மட்டுமே செலவுசெய்து தனக்கு சிகிச்சை செய்துகொள்வது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

டோனிக்கு கல்சியம் குறைபாடு காரணமாக மூட்டு வலி ஏற்பட்டுள்ளதாகவும் இதற்காக ஆயுர்வேத மருத்துவ முறையில் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்பட்டுவருகிறது. ஜோர்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் வசித்துவரும் டோனி, அங்கிருந்து 70 கி.மீ. தொலைவிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியான லாபுங் என்ற கிராமப் பகுதியில் வசிக்கும் வந்தன் சிங் கேர்வார் என்ற ஆயுர்வேத மருத்துவரிடம் தனது மூட்டு வலிக்காக சிகிச்சை பெற்று வருகிறார்.

டோனியின் பெற்றோரும் இந்த ஆயுர்வேத மருத்துவரிடம் சிகிச்சை பெற்று நல்ல பலனை கண்டுள்ளனர். அதனடிப்படையிலேயே கடந்த ஒரு மாதமாக இந்த மருத்துவரிடம் டோனி சிகிச்சை பெறுகிறார். அத்துடன், இந்த சிகிச்சைக்காக அந்த ஆயுர்வேத மருத்துவரிடம் டோனி செலுத்திய கட்டணம் ரூ. 40 மட்டுமே. பெரும்பாலும் காருக்குள் அமர்ந்தே ஆலோசனை பெற்று மருந்துகளை வாங்கிக்கொள்ளும் டோனி, அருகே வந்து பார்க்கும் சில ரசிகர்களிடம் மட்டும் செல்பி எடுத்துக்கொள்கிறாராம்.

## கட்டாய வெற்றியை நோக்கி இன்று களமிறங்கும் இலங்கை மகளிர் அணி

சுற்றுலா இந்திய மகளிர் அணிக்கும், இலங்கை மகளிர் அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரிலும், 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரிலும் ஆடுகிறது. முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இந்திய அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், அடுத்த தொடரான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய மகளிர் அணி வெற்றிபெற்ற நிலையில், இரண்டாவது போட்டி இன்று கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது. இன்றைய போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றால் மாத்திரமே ஒருநாள் தொடரை தக்கவைக்க முடியும்.



## வடமாகாண சட்டத்தரணிகள் கிரிக்கெட் அணிக்கு வெற்றி

**(யாழ். நிருபர்)**

வடமாகாண சட்டத்தரணிகள் கிரிக்கெட் அணியினருக்கும், வடமாகாண வைத்தியர் கிரிக்கெட் அணியினருக்குமிடையிலான கடினபந்து கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றிபெற்றது.

சட்டத்தரணிகள் அணிக்கு நீதிபதி அந்தோனிப்பிள்ளை யுட்சனும், வைத்தியர் அணிக்கு புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறிதரனும் தலைமை தாங்கினர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் வைத்தியர் அணி நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 35 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களை வைத்தியர் அணி பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அணித்தலைவர் வைத்தியர் கணேசமூர்த்தி சிறிதரன் 39 ஓட்டங்களையும், வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கம் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சட்டத்தரணிகள் அணி சார்பில் சட்டத்தரணி த.அஞ்சனன் 3 விக்கெட்டுகளையும், சட்டத்தரணி இராசையா இளங்குமரன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு 207 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய சட்டத்தரணிகள் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 20.3 ஓவர்களில் 207 ஓட்டங்களை பெற்று வெற்றியை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் (யாழ். மாநகர முதல்வர்) அதிரடியாக 72 ஓட்டங்களையும், சட்டத்தரணி




த. அஞ்சனன் அபாரமாக 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் வைத்தியர் அணி சார்பில் வைத்தியர் கௌரிபாகன் 2 விக்கெட்டுகளையும், வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கம் 1 விக்கெட்டையும் சாய்த்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்துவீச்சாளராகவும் சகல துறைகளிலும் பிரகாசித்த சட்டத்தரணி த. அஞ்சனனும், சிறந்த களத்தடுப்பாளராக வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கமும், சிறந்த துடுப்பாட்ட வீரராக வி. மணிவண்ணனும் தெரிவுசெய்யப்பட்டனர்.












இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு ஆகியன இணைந்து, மறைந்த ஆஸி. கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்னுக்கு நினைவு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்றை நேற்று முன்தினம் காலியில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் வோர்னின் சகோதரர் ஜேசன் வோர்ன் மற்றும் அவரது மனைவி, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர்கள், சுற்றுலாத்துறை அமைச்சர், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7